செம்மங்குடி கோபாலகிருஷ்ணனின்

# Learn

## In a Week

Rs.1000/-

# ஒரே வாரத்தில் கற்கலாம்

## தமிழ்

# CorelDRAW

* Tool Box
* Node, Symmetrical, Smooth, Cusp
* Pick Tool
* Shape Tool
* Roughen Brush Tool
* Smart Drawing
* Rectangle, Ellipse, Polygon Tool
* Text Tool
* Outline Tool
* Fountain Fill Tool (Color)
* Interactive Transparency Tool
* Fill Tool
* Fit Text to Path

இலவசம்
**3 DVDs**

***By: Semmangudi GOPALAKRISHNAN .V alias GK***

*Publishers :*

**CIIT Infotech**

New No. 45 (old AP969), 2nd Floor, 70th Street, 11th Sector, K.K. Nagar,

Chennai - 600 078, Tamil Nadu, India.

**Land Mark:** Amman Koil Bus Stop

11th Sector → Guru Ragavendra Hospital → V P Textiles → 70th Street.→

opp.side 2nd Building (4 story building)

**www.ciitinfotech.com Email: vgk_gk@yahoo.co.in** Cell: **94444 51485**

# எங்களது புத்தகங்கள்

## Hardware Books மூன்று Volumeகள்

**1) Volume -1 Rs.1000/- Free 3 DVDs**
Complete Assembling, Trouble Shooting, O/S Installation, Device Drivers, Core 2 Duo Assembling.

**2) Volume -2 Rs.1000/- Free 3 VCDs**
Connecting of 4 Hard Disks, Web/Digital Camera, TV/Caputre Card, Multi Meter, Second Harddisk Partition, Windows 7 Installation, Windows 7 Upgrade, 130 கேள்விளுக்கு பதில்கள்

**3) Volume -3 Service Engineer Rs.1,000/- Free 4 DVDs**
Complete Servicing, Windows XP Installation, VIRUS Removal, Data Recovery, Earth Testing, Static Power Discharge. RAM Service (Memory), SATA to IDE Converter GHOST, System Restore.

## Networking - LAN Books இரண்டு Volumeகள்

**4) Volume - 1. Free 3 VCDs. Rs.1000/-**
Networking Fundamentals,Topology, HUB/Switch,Peer to Peer, IP Address, Subnet Mask, Network Configuration, Network Printer, Wireless LAN, Wireless Internet.

**5) Volume -2 (Admin. 2003 Server) Rs.1000/- Free 3 DVDs**
2003 Server Installation Live, MMC, Users, Groups, Permissions, Rights, Account Policy, Audit Policy, DHCP, DNS, upgrade to Domain Controller, Terminal Server, Thin Client

**6) LAPTOP Servicing- Free 3 DVDs Rs.1,000/-**
Dismantling, Servicing, Assembling, Laptopஐ சுலபமாக பிரித்து Service செய்து திரும்ப Assemble செய்யலாம்

**7) Video Editing- Free 3 DVDs Rs.1,000/-**
Video Capturing, Fireware Card, Pinnacle Capture card, Video Editing, Titling, Transperancy, Transitions, Hollywood Effects, Plugins, Exporting, CD, DVD Writing

**8) Computer Basics - Free 3 DVDs. Rs.1000/-**
Wordpad, Notepad, Windows Media Player, CD Writing, Printing

**9) Office Automation - Free 3 DVDs. Rs.1000/-**
MS Word, MS Excel, MS Power Point, Internet, Outlook Express, E-Mail, Yahoo Messenger, Chating, PDF etc.,

**10) Photoshop - Free 3 DVDs Rs.1000/-**
Tool Box, Selection Tools, Layers, Gradient Effect, Layer Styles, Filters, Colour Corrections, Borders, Patterns, அனைத்தையும் தன்னந்தனியாக கற்று செய்யலாம்.

**11) Pagemaker - Free 3 DVDs Rs.1000/-**
Complete Course, Books, Visiting Card, Wedding Card, Lables, Strickers, Advertisements, Bill Books, அனைத்தையும் தன்னந்தனியாக கற்று செய்யலாம்.

**12) Corel Draw - Free 3 DVDs Rs.1000/-**
Pick Tool, Shape Tool, Roughen Brush Tool, Smart Drawing, Polygon Tool, Text Tool, Fill Tool, Edit Menu, Layout Menu, அனைத்தையும் தன்னந்தனியாக கற்று செய்யலாம்.

**13) Export Business - Free 3 DVDs Rs.1,000/-**
ஏற்றுமதி தொழில் தொடங்குவது முதல் சரக்குகளை ஏற்றுமதி செய்து இறக்குமதியாளரிடமிருந்து பாதுகாப்பாக பணம் பெறுவது வரை மிகவும் எளிமையாக விவரிக்கப்பட்டுள்ளது. Complete Deatils about Exports.

Copyright: **V. GOPALAKRISHNAN**
First Edition: August, 2011

India Rs.1,000/- Postage extra
Foreign: Rs.2,000/- Including Postage

## முன்னுரை

அன்பார்ந்த வாசகர்களே,

**கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்**

**"ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது"** என்பது பழமொழி

அது போல நாம் கல்லூரியில் படிக்கின்ற பாடத்திட்டங்களின் மூலம் பெறப்படுகின்ற கல்வி அறிவானது நாம் செய்கின்ற வேலைக்கு பயனுள்ளதாக இருப்பதில்லை என்பதை யாவரும் அறிந்த உண்மை. நாம் தனியாக செயல்முறை பயிற்சியோடு படிக்கின்ற படிப்புகள்தான் ஒரு நல்ல வேலை வாய்ப்பை பெறுவதற்கும், நாம் செய்கின்ற வேலைக்கும் பயனுள்ளதாக இருக்கின்றன.

இன்றைய நாகரீகமான உலகில் கம்ப்யூட்டரின் பயன்பாடு மிக மிக அதிக அளவில் உள்ளது என்பதை யாவரும் அறிவோம். எனவே கம்ப்யூட்டர் சம்பந்தமான பாடங்களை செயல்முறை பயிற்சியுடன் நன்கு படித்து நல்ல வேலை வாய்ப்பை பெறுவதோடு நல்ல ஊதியமும் பெறலாம்.

DTP தெரிந்தவர்களுக்கு வயது வரம்பு கல்வித் தகுதியின்றி அதிக அளவில் வேலை வாய்ப்பு உள்ளது. DTPல் பயன்படுத்தப்படுகிற முக்கியமான மூன்று Softwareகளில் Coreldrawவும் ஒன்று. இன்று நாம் பார்க்கும் அனேக விளம்பரங்கள் Coreldrawல் செய்யப்பட்டவைகள். Coreldrawஐ கற்பது மிகவும் சுலபம். Coreldrawல் செய்யக்கூடிய வேலைகளை செய்வதும் சுலபம். வேலை வாய்ப்புகளும் சுலபம் அல்லது சுயதொழில் செய்வதும் சுலபம். Coreldrawல் செய்யக்கூடியவைகளை தெளிவாகவும், சுருக்கமாகவும் செயல்முறை பயிற்சியுடனும் எளிதில் புரிகின்றபடி இந்த புத்தகம் மற்றும் DVDகளை தயாரித்துள்ளோம். ஒரே வாரத்தில் நல்ல பயிற்சியையும் பெறலாம். இவற்றின் மூலம் நீங்கள் கண்டிப்பாக ஒரு சிறந்த DTP Operatorஆக செயல்படலாம் என்பதை உறுதியாக கூறுகிறேன்.

உங்கள் அன்பன்,
**செம்மங்குடி V. கோபாகிருஷ்ணன்** *alias* **GK**

# INDEX


Coreldraw Introduction ........ 5
Tool Box ........ 17
Node ........ 19
Pick Tool ........ 26
Shape Tool ........ 29
Knife Tool ........ 30
Erase Tool ........ 31
Smudge Tool ........ 32
Roughen Brush Tool ........ 33
Free Hand Tool. ........ 39
Smart Drawing Tool ........ 62
Rectangle Tool . ........ 64
Ellipse Tool ........ 68
Polygon Tool ........ 73
Basic Shape Tool ........ 77
Text Tool ........ 85
Eye Dropper ........ 125
Outline Tool ........ 126
Fill Tool ........ 133
Inteactive Fill Tool ........ 141
Menu Bar ........ 148
Edit Menu ........ 156
Layout Menu ........ 162
Page setup Menu ........ 163
Arrange Menu ........ 164
Group Menu ........ 165
Weld Menu ........ 166
Trim Menu ........ 167
Text Menu ........ 171

# Corel Draw

Corel Draw என்பது ஒரு Application Software. இது முக்கியமாக படங்களை வரைய பயன்படுகிறது. ஒரு ஓவியர் Line Drawing எனப்படும் படங்களை மிகவும் சுலபமாக வரைகிறார். அதே போல இந்த Software மூலம் நாமும் விருப்பப்படி அநேக விதமான படங்களை வரையலாம். DTP என்றால் Desktop Publishing என்பது உங்களுக்கு தெரியும். அதாவது புத்தகங்கள், கடிதங்கள், விளம்பரங்கள், திருமண அழைப்பிதழ்கள் Visiting Card போன்ற வேலைகளை சுலபமாக தயாரிக்க இந்த DTP வேலை பயன்படுகிறது. முக்கியமாக DTP வேலை செய்ய கீழ்க்கண்ட Softwareகள் தேவை.

1) Page Maker
2) Photoshop
3) Corel Draw

இவைகள் மூன்றிலும் நல்ல பயிற்சி தேவை. இவற்றில் இப்பொழுது நாம் Corel Draw பற்றி பார்க்கப் போகிறோம்.

Corel Drawவில் அநேக Versionகள் உள்ளன. அவைகள் விவரம் பின்வருமாறு:

1) Corel Draw 10
2) Corel Draw 11
3) Corel Draw 12
4) Corel Draw X3
5) Corel Draw X4
6) Corel Draw X5

அனேக Versionகள் இருந்தாலும் ஏதாவது ஒன்றில் பயிற்சி பெற்றால் போதுமானது. எல்லா Versionகளிலும் சுலபமாக வேலை செய்யலாம். அடிப்படையில் எல்லாமே ஒன்றுதான்.

அடுத்து அடுத்து வரும் புது Versionகளில் சில சிறப்பு அம்சங்கள் கூடுதலாக காணப்படும்.

இங்கு விவரிக்கபட்டுள்ள விளக்கங்கள் முலமாக Corel Draw 12 ல் சுலபமாக வேலை செய்யலாம்.

## Corel Drawஐ Open செய்தல்:

Corel Draw 12ஐ கீழ்க்கண்ட வழிகளில் Open செய்யலாம்.

1) Start → All Programs → Corel Draw 12 அல்லது

2) Desktopல் அதற்குரிய ஐகான் இருந்தால் Double Click செய்து Open செய்யலாம். அல்லது

3) Start Menuவில் இருந்தால் Double Click செய்து Open செய்யலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




Start Menuவில் உள்ள Corel Draw Menu

Corel Drawஐ Double Click செய்ததும் முதன் முதலாக கீழ்கண்ட விண்டோ தோன்றி சில வினாடிகள் கழித்து மறைந்து விடும்.




இந்த விண்டோ தோன்றி சில வினாடிகள் கழித்து தானாகவே மறைந்து அடுத்த பக்கத்தில் உள்ள விண்டோ தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




Check Box

இங்கு New என்பதை கிளிக் செய்யவும். உடனே அடுத்த விண்டோ தோன்றும். இதனை அடுத்து Corel Drawவிற்கான விண்டோ Open ஆகும்.

## குறிப்பு:

ஒவ்வொரு தடவையும் Coral Drawவை Open செய்யும் பொழுது இந்த விண்டோ தோன்றும். இந்த விண்டோ வேண்டாம் என கருதினால் இடபக்கம் கீழ் முனையில் உள்ள Check Boxல் உள்ள டிக்கை அகற்றவும்.

இந்த Check Boxல் டிக் இருந்தால் ஒவ்வொரு முறையும் Corel Drawஐ Open செய்யும் பொழுது இந்த விண்டோ தோன்றும்.

டிக் அகற்றப்பட்டால் இந்த விண்டோ தோன்றாது. நேராக Corel Drawவின் விண்டோவிற்கு சென்று விடும்.

இந்த விண்டோவில் 6 ஐகான்கள் உள்ளன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

1) New
2) Recently Used
3) Open
4) New From Template
5) CorelTUTOR
6) What’s New?

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 1) New :

புதியதாக ஒரு பைலை Create செய்ய இதை Select செய்ய வேண்டும். அதாவது ஒரு புதிய பைலை உருவாக்க உதவுகிறது.

## 2) Recently Used:

இந்த Softwareல் கடைசியாக பயன்படுத்துப்பட்டு Save செய்து வைக்கப்பட்டுள்ள பைலை Open செய்ய வேண்டுமானால் இதை Select செய்ய வேண்டும். அதாவது Corel Drawல் கடைசியாக வேலை செய்த பைலை Open செய்ய இது உதவுகிறது.

## 3) Open :

ஏற்கனவே தயாரித்து Save செய்து வைக்கப்பட்டுள்ள அநேக பைல்களில் தேவையானதை Open செய்ய இதை செலக்ட் செய்ய வேண்டும்.

## 4) New from Template:

Templete என்றால் ஏற்கனவே Readymade ஆக தயாரித்து வைக்கப்பட்டுள்ள சில Designகள் என்று பொருள். இதை Select செய்தால் Ready Madeஆக அநேக டிசைன்களை காணலாம். நமது தேவைக்கு தகுந்தபடி தேவையான ஒன்றை செலக்ட் செய்து பயன்படுத்தலாம்.

உதாரணத்திற்கு ஒரு Letter Headஐ தயாரிக்க நினைத்தால் அதை Select செய்து பயன்படுத்தலாம். இதனால் நாம் புதியதாக ஒரு Designஐ உருவாக்க தேவை இல்லை. தேவையான விவரங்களை பூர்த்தி செய்தால் போதுமானது.

## 5) Coral TUTOR:

இதை Help மெனு போல பயன்படுத்தலாம். Coral Drawவை கற்றுக் கொள்ள வசதியாக இருக்கும். ஒரு Design ஐ செலக்ட் செய்து வேலை செய்யும் பொழுது அதில் சந்தேகங்கள் எற்படும் போது தீர்வு காணலாம்.

## 6) What’s New ? : (What is New ?)

இந்த பதிப்பில் உள்ள புதிய சிறப்பு அம்சங்களை தெரிந்து கொள்ளலாம். அதாவது இதற்கு முந்தைய பதிப்பில் இல்லாத என்ன என்ன சிறப்பு அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

இப்பொழுது நாம் புதியதாக ஒரு பைலை Create செய்யப் போகிறோம். எனவே இங்கு New என்பதை கிளிக் செய்யவும். உடனே அடுத்த விண்டோ தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

Coreldrawஐ Open செய்ததும் முதலில் கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




Page Number

இதே விண்டோவில் கீழ்க்கண்ட அயிட்டங்கள் உள்ளன.

1) Title Bar
2) Meu Bar
3) Standard Tool Bar
4) Property Bar
5) Tool Box
6) Scale Line
7) Page Number
8) Scroll Bar
9) Page

GK

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Corel Drawவிற்கான விண்டோ




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 1) Title Bar:

இது விண்டோவின் மேல் பாகத்தில் ஒரு பட்டை போல நீல நிறத்தில் உள்ளது.




இங்கு இடது பக்கத்தில் முதலில் Softwareன் பெயரையும் அதனை அடுத்து தற்சமயம் பயன்படுத்திக்கொண்டு இருக்கும் பைலின் பெயரையும் காணலாம்.

நாம் Corel Draw 12ஐ பயன்படுத்துகிறோம். எனவே முதலில் Corel Draw 12 என உள்ளது. அதற்கு அடுத்து உள்ள Graphic1 என்பது பைலின் பெயர். வலதுபுறம் மூன்று பட்டன்கள் உள்ளன. இவற்றை பற்றி ஏற்கனவே உங்களுக்கு தெரிந்து இருக்கும். அவைகள் பின்வருமாறு:

1) Minimise Button
2) Maxmise Button
3) Close Button



## Minimise பட்டன்:



இதை கிளிக் செய்தால் Corel Draw தாற்காலிகமாக மறைந்து சிறியதாக இடதுபுறம் கீழ்பாகத்தில் இருக்கும். வேண்டும்போது திரைக்கு திரும்ப கொண்டு வரலாம்.

## Maximise பட்டன்:



இது சிறியதாக உள்ள விண்டோவை திரை முழுவதும் தோன்றச் செய்கிறது. திரும்பவும் கிளிக் செய்தால் சிறியதாக மாறி தோன்றும்.

## Close பட்டன்:



இது Corel Drawல் வேலை முடிந்த பிறகு Corel Drawஐ Close செய்ய உதவுகிறது.

இந்த Title Barல் கீழ்க்கண்டவைகளை காணலாம்.

1) Softwareன் பெயர் - Corel Draw 12
2) பைலின் பெயர் - Graphic1
3) பைலின் Path அதாவது பைல் இருக்கும் இடம் Location ஆகியவற்றை காணலாம்.

ஒரு பைலுக்கு பெயர் வைக்காத வரையில் அதாவது Save செய்யாமல் இருக்கும் வரை பைலின் பெயர் Graphic1 என தோன்றும்.

பைலுக்கு பெயர் வைத்த பிறகு அதாவது Save செய்தபிறகு Graphic 1 என்பதற்கு பதிலாக பைலின் பெயர் தோன்றும். பைலின் பெயருடன் CDR என்ற பைல் Extension உடன் முடியும்.

உதாரணத்திற்கு Sample என ஒரு பைலை உருவாக்கினால் அதன் பெயர் **Sample.CDR** என தோன்றும். அதாவது இந்த பைல் Corel Drawவில் தயாரிக்கப்பட்டது என்று பொருள். இங்கு CDR என்பது Corel Drawஐ குறிப்பிடுகின்றது.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 2) Menu Bar:

இது Title Barக்கு கீழ் உள்ளது. வரிசையாக 11 மெனுக்களின் தலைப்புகள் இங்கே உள்ளன. ஒவ்வொரு தலைப்பின் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன. ஒரு தலைப்பை செலக்ட் செய்தால் அதன் கீழ் உள்ள மெனுக்களை பார்க்கலாம். தேவையான மெனுவை கிளிக் செய்து பயன்படுத்தலாம்.




Menu Bar

## 3) Standard Tool Bar

இது Menu Barக்கு கீழ் உள்ளது. இதில் அநேக ஐகான்களை காணலாம்.

ஒரு செயலை 3 வழிகளில் செய்யலாம்

1) மெனுக்கள் மூலமாக
2) Shortcut கீ மூலமாக
3) இந்த Standard Tool Barல் உள்ள ஐகான்கள் மூலமாக

இவற்றில் ஏதாவது ஒன்றை பயன்படுத்தலாம்.

இந்த Tool Barல் வரிசையாக ஐகான்கள் உள்ளன. எனவே ஒரு செயலை செய்ய மெனுவை தேடி அலையாமல் இந்த ஐகான்களை பயன்படுத்தலாம். அடிக்கடி பயன்படுத்தக்கூடிய செயல்களுக்கான ஐகான்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ள உள்ளன.




இங்கு காணப்படும் ஐகான்கள் Disable ஆக உள்ளன. திறையில் ஒரு Objectஐ Create செய்த பிறகு இங்குள்ள ஐகான்கள் Enable ஆகிவிடும்.

ஐகான்களின் விவரங்கள் பின்வறுமாறு:

1) New
2) Open
3) Save
4) Print
5) Cut
6) Copy
7) Paste
8) Undo
9) Redo
10) Zoom size

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 4) Property Bar

இது Standard Tool Barக்கு கீழே உள்ளது.

திரையில் ஒரு Objectஐ உருவாக்கிய பிறகு இது தோன்றும் அல்லது Tool Boxல் ஏதாவது ஒரு Toolஐ செலக்ட் செய்த உடன் அதற்குரிய Optionகளுடன் தோன்றும். செலக்ட் செய்யப்படுகிற Toolற்கு தகுந்தவாறு Optionகள் தோன்றும். இந்த Tool Barல் தோன்றும் Optionகள் Tool Boxல் உள்ள ஒவ்வொரு Toolற்கும் தொடர்பு உடையது.

உதாரணத்திற்கு Text Toolஐ செலக்ட் செய்தால் உடனே அதற்குறிய Optionகள் தோன்றும். Text Toolஐ செலக்ட் செய்தால் எழுத்துகளில் மாற்றங்கள் செய்ய தேவையான அனைத்து அயிட்டங்களும் இதில் இருக்கும். உதாரணத்திற்கு Font Size, Font Style, Bold, Iltalic, Underline போன்ற விவரங்கள்.




இது Text Toolற்கான Property Bar

## 5) Tool Box

இந்த Tool Box இடது பக்கத்தில் ஓரமாக செங்குத்தாக காணப்படும். இதில் அநேக Toolகள் உள்ளன. இங்கு தெரிகின்ற ஒவ்வொரு Toolற்கு உள்ளும் அநேக Toolகள் அடங்கி உள்ளன. இவைகள் படங்களை வரையவும் அநேக தோற்றங்களை உருவாக்கவும் பயன்படும்.

சில Toolகளின் வலது புறம் கீழ் பாகத்தில் ஒரு முக்கோணம் காணப்படும். அவ்வாறு முக்கோணம் காணப்பட்டால் அதற்குள் மேலும் சில Toolகள் உள்ளன என்று பொருள். அதன் மீது மவுஸ் பாயிண்டரை வைத்தால் அதற்கான Toolகளை காணலாம்.

இங்கு காணப்படும் Tool கடைசியாக பயன்படுத்தப்பட்ட Tool ஆகும்.

முக்கோணம் இல்லாத Toolகளில் மேலும் Toolகள் இல்லை என்பது பொருள். அதாவது தெரிகின்ற ஒரே ஒரு Toolதான்







Tool Boxஐ இவ்வாறு பக்கவாட்டிலும் பயன்படுத்தலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 6) Scale Line:

மேல் பக்கத்திலும் மற்றும் இடது பக்கத்திலும் Scale அளவுகள் தோன்றும். ஒரு Scaleல் உள்ளது போல காணப்படும். இதல் உள்ள Scale அளவுகளை நமது விருப்பப்படி Inches, Milli Meter போன்ற வற்றில் மாற்றி செயல்படுத்தலாம்.




## 7) Page Number:

கீழ்ப்பாகத்தில் பக்கங்களின் எண்களைக் காணலாம். நாம் தேவையான பக்கத்திற்கு உடனே போக அந்த பக்க எண்ணை கிளிக் செய்தால் போதும். உடனே அந்த பக்கம் தோன்றும். மேலும் கீழ்கண்ட பக்கங்களுக்கும் உடனடியாக செல்லலாம். அவற்றிற்கு தனித்தனி குறியீடுகள் உள்ளன.

1) முதல் பக்கத்திற்கு செல்ல - First Page
2) கடைசி பக்கத்திற்கு செல்ல  Last Page
3) முந்தய பக்கத்திற்கு செல்ல - Previous  Page
4) அடுத்த பக்கத்திற்கு செல்ல - Next Page
5) இருக்கின்ற பக்கத்திற்கு அடுத்ததாக ஒரு பக்கத்ததை சேர்க்க
6) இருக்கின்ற பக்கத்திற்கு முன்பாக ஒரு பக்கத்ததை சேர்க்க




◀ முந்தைய பக்கம் செல்ல    ▶ அடுத்த பக்கம் செல்ல

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 8) Scroll Bar:

Scroll Barகள் இரண்டு வகைகள் உள்ளன.

1) Vertical Scroll Bar

2) Horizontal Scroll Bar

### 1) Vertical Scroll Bar:

Scroll பட்டன் என்பது Scroll Barல் உள்ள ஒரு சதுர வடிவ பட்டன்.

Vertical Scroll Bar என்பது வலது பக்கத்தில் மேல் இருந்து கீழ் நோக்கி உள்ள ஒரு பட்டை. இதில் உள்ள Scroll பட்டன் மீது மவுஸ் பாயிண்டரை வைத்து மேலும் கீழும் Drag செய்தால் பக்கம் மேலும் கீழுமநகரும்.

### 2) Horizontal Scroll Bar:

Horizontal Scroll Bar என்பது விண்டோவின் கீழ்ப்பாகத்தில் வலது பக்கத்தில் உள்ள ஒரு பட்டை. இதன் நடுவில் Scroll பட்டன் உள்ளது. இங்கு உள்ள Scroll பட்டனை பக்கவாட்டில் Drag செய்தால் பக்கம் பக்கவாட்டில் நகரும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 9) Page

திரையின் நடுவில் ஒரு கட்டம் தோன்றும். அதுதான் நாம் வேலை செய்ய வேண்டிய பக்கம் (இடம்). அதாவது Page. இந்த கட்டத்தில்தான் நாம் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும். Corel Drawவில் செய்ய வேண்டிய அனைத்து வேலைகளும் இங்கே தான் செய்யப்பட வேண்டும்.




Page Number

இந்தக் கட்டத்திற்குள் செய்கின்ற செயல்கள் மட்டும்தான் பேப்பரில் Print ஆகும். இந்தக் கட்டத்திற்கு வெளியே உள்ள அனைத்தும் Print ஆகாது. ஆனால் மற்ற பக்கங்களை Open செய்யும் பொழுது தோன்றும்.

### குறிப்பு:

Tool Box, Property Bar, Standard Tool Bar ஆகிய வற்றின் இடது ஓரத்தில் மெல்லியதாக இரண்டு கோடுகள் போல காணப்படும். அந்த கோடுகளின் மீது மவுஸ் பாயிண்டரை Click செய்து Drag செய்யலாம். Drag செய்து விரும்பிய இடத்தில் வைக்கலாம்.




இரண்டு கோடுகள்

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Tool Box

இந்த Tool Boxல் ஏராளமான Toolகள் உள்ளன. அவற்றில் நமக்கு தெரிபவை 15 Toolகள் மட்டுமே. மவுஸ் பாயிண்டரை ஒரு Tool மீது வைத்தால் அதன் பெயரை காணலாம். மேலும் அதற்குள் உள்ள மற்ற Toolகளையும் காணலாம்.




முதலில் Corel Drawஐ Open செய்ததும் இந்த Tool Box இடது புறத்தில்தான் செங்குத்தாக தோன்றும். இதை Drag செய்து மேலே உள்ளது போல Horizontal ஆக தோன்றச் செய்யலாம். மேலும் தேவையான இடத்தில் Drag செய்து வைத்துக் கொள்ளலாம்.

Toolகளின் Sizeஐ மூன்று விதமாக தோன்றச் செய்யலாம்.

1) Small Button Size - சிறியதாக
2) Medium Button Size - நடுத்தரமாக
3) Large Button Size - பெரியதாக

Right Click in Too Box → Customize → Toolbox Toolbar
→ Small Button Size/Mediam Button Size/Large Button Size






Large Button Size மேலே கொடுக்கப்பட்டுள்ளது,




Mediam Button Size




Small Button Size

Small Button Size

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## மவுஸ் பயன்பாடு பற்றி ஒரு தகவல்

**Click** :

மவுசை ஒரு இடத்தில் வைத்து இடது பட்டனை ஆள்காட்டி விரல் நுனியால் அழுத்திய உடனே விடுதல். அதாவது Calling Bell Switchஐ அடிப்பது போல. அழுத்தும் பொழுதும் டிக் என சப்தம் கேட்கும். அதே போல விரலை தூக்கும் பொழுதும் டிக் என சப்தம் கேட்கும். அதாவது டிக் டிக் என இரண்டு தடவைகள் கேட்கும். சில நேரங்களில் டிக் டிக் சப்தத்தை காதுகளால் கேட்க இயலாது ஆனால் நன்கு உணரலாம்.

**Doubl Click:**

மேலே சொல்லப்பட்ட செயலை இரண்டு முறை செய்தல். அதாவது டிக் டிக் என இரண்டு முறை செய்ய வேண்டும். இதை Double Click என்பர்.

**Right Click:**

Right Click என்றால் வலது பட்டனை ஆள்காட்டி விரல் நுனியால் அழுத்தி விடுதல்.

**Move:**

Move என்றால் சாதாரணமாக மவுஸ் பாயிண்டரை நகர்த்துதல். அதாவது இடது அல்லது வலது பட்டன்களை அழுத்தாமல் மவுஸை மட்டும் நகர்த்துதல். இவ்வாறு செய்வதால் மவுஸ் பாயிண்டர் நகருவதை காணலாம்.

**Drag:**

Drag என்றால் ஒரு இடத்தில் இருந்து மவுசின் இடது பட்டனை ஆளகாட்டி விரலால் அழுத்தியவாறு நகர்த்துதல். அதாவது Click செய்வதற்கு இடது பட்டனை அழுத்துகிறோம் அதே போல அழுத்தி திரும்ப விரலை எடுக்காமல் அழுத்தியவாறு நகர்த்துதல்.

**Release:**

Release என்றால் Drag செய்த பிறகு மவுஸ் பட்டனில் இருந்து விரலை எடுத்தல்.

**Scroll:**

Scroll செய்தல் என்றால் மவுஸின் முதுகில் உள்ள சக்கரத்தை முன்பக்கமாகவோ அல்லது பின்பக்கனமாகவோ ஆள்காட்டி விரல் நுனியால் உருட்டுதல்.

மவுஸால் செய்ய வேண்டிய சில செயல்கள் கீழ்கண்டவாறு இந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்டு இருக்கும்.

**Click → Move → Click**

முதலில் மவுசை கிளிக் செய்து பிறகு மவுசை நகர்த்தி திரும்ப கிளிக் செய்ய வேண்டும்.

**Drag → Release**

ஆள்காட்டி விரல் நுனியால் மவுஸின் இடது பட்டனை அழுத்தியவாறே நகர்த்தி பின்னர் விரலை எடுக்க வேண்டும்.

**Drag → Release → Double Click**

முதலில் கொஞ்ச தூரம் அதாவது வேண்டிய அளவு Drag செய்து பிறகு விரலை எடுத்து விட்டு உடனே இரண்டு தடவை கிளிக் செய்ய வேண்டும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Node

சாதாரணமாக பெண்கள் மிகப்பெரிய அல்லது சிறிய கோலங்களை புள்ளி வைத்து போடுவார்கள். இவ்வாறு போடப்பட்ட கோலத்தை புள்ளி வைத்த கோலம் என்பர்.

Corel drawலும் இதே தத்துவம்தான் கையாளப்படுகிறது.

Corel drawல் பயன்படுத்தப்படும் புள்ளிகளை Node என கூறுகிறோம்.

எனவே Corel drawவில் ஒரு Drawingஐ வரைய Nodeகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

அதாவது Nodeகள் மூலம்தான் நாம் புதிய வடிவங்களை உருவாக்க முடியும்.

ஒவ்வொரு Line மற்றும் Curveகளில் Nodeகள் உள்ளன. ஒரு நேர்க்கோட்டை வரைந்தால் இரண்டு முனைகளிலும் இரண்டு Nodeகளை காணலாம்.

அதே போல் Rectangle, Circle, Ellipse, Polygon போன்றவற்றிலும் Nodeகளை காணலாம்.

**Curve Node:** மேலே கூறப்பட்ட Nodeகளில் இருந்து சற்று வேறுபடும்.

**Segment:** இரண்டு Nodeகளுக்கு இடையே உள்ள பகுதி Segment எனப்படும். இவை இரண்டு வகை.




**Line Segment:** நேர்க் கோடாக இருந்தால் Line Segment எனப்படும்.

**Curve Segment:** வளைவு கோடாக இருந்தால் Curve Segment எனப்படும்.

Line Segmentஐ Curve Segmentஆகவும் அதே போல் Curve Segmentஐ Line Segment ஆகவும் மாற்றி பயன்படுத்தலாம்.

அடிப்படையில் Nodeகளை Cusp, Smooth, Symmetrical என மூன்று வகையாக பிரிக்கலாம்.

ஒவ்வொரு Nodeம் ஒவ்வொரு விதமாக செயல்படும். செயல்பாட்டிற்கு தகுந்தவாறு Nodeகளை மாற்றி பயன்படுத்த வேண்டும்.

முதலில் Default ஆக Symmetrical Node உருவாகும். நமக்கு Cusp அல்லது Smooth Nodeதான் தேவை என கருதினால் Symmetrical Nodeஐ Cusp அல்லது Smooth Nodeஆக மாற்றி பயன்படுத்தலாம்.

அதாவது நமது தேவைக்கு தகுந்தவாறு Nodeஐ மாற்றி பயன்படுத்தலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Nodeஐ Select செய்தல்:

Shape Toolஐ Select செய்து Nodeன் மீது கிளிக் செய்ய வேண்டும். அல்லது F10 கீயை Press செய்தும் செய்யலாம்.

Shift கீயை அழுத்தி அநேக Nodeகளை செலக்ட் செய்யலாம்.

Nodeஐ Drag செய்து நகர்த்தலாம்.

வளைவான கோடுகளில் விருப்பப்படி புதிய Curveகளை உருவாக்க Nodeகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு Curveஐ உருவாக்க முதலில் ஒரு Nodeஐ கிளிக் செய்ய வேண்டும். உடனே மூன்று புள்ளிகளுடன் ஒரு நீளமான கோடு உருவாகும். நீளமான கோடு நீல நிற புள்ளிகளால் காணப்படும்.

நடுவில் உள்ள பெரிய புள்ளி Node எனப்படும்.

அதன் இருபுறமும் உள்ள இரண்டு புள்ளிகள் Handle எனப்படும். இவைகளை இணைக்கும் நீல நிற புள்ளிகளால் ஆன நேர்க்கோடு Controller Line எனப்படும்.

## Node, Controler Line, Handle:




Symmetrical, Smooth, Cusp என மூன்று வகையான Nodeகள் உள்ளன.

## Symmetrical Node:

Symmetrical என்றால் ஒரே மாதிரியாக என்று பொருள்.

Node, Handleகள் மற்றும் Controller Line ஆகியவைகள் ஒரே நேர்க் கோட்டில் இருக்கும். Nodeல் இருந்து Handleகள் எப்பொழுதும் சமதூரத்தில் இருக்கும்.

ஒரு Handleஐ உட்பக்கமாகவோ வெளிப்பக்கமாகவோ நகர்த்தினால் அதே அளவிற்கு அடுத்த Handleலும் நகர்ந்துவிடும்.




Symmetrical Node

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

ஒரு Handleஐ Nodeஐ சுற்றி நகர்த்தினால் அடுத்த Handle எதிர் திசையில் நகரும்.



ஒரு Handleஐ Nodeஐ சுற்றி Rotate செய்யும் பொழுது வளைவின் தோற்றம்.

Handleஐ உட்பக்கமாக இழுத்தால் எதிரே உள்ள Handleலும் உட்பக்கமாக நகரும்.



ஒரு Handleஐ Nodeஐ சுற்றி Rotate செய்த பிறகு வளைவின் தோற்றம்.

ஒரு Handleஐ வெளிப்பக்கமாக இழுத்தால் எதிர் Handleம் எதிர்பக்கமாக நகரும். இதை இரண்டு விதமாக செயல்படுத்தலாம்.

**1)** ஒரு Handleஐ Nodeஐ சுற்றி நகர்த்தினால் Nodeன் இரு பக்கமும் வளைவான கோடு தோன்றுவதை காணலாம். இதனால் கோடு வளைவதை கண்ணால் பார்த்து தேவையான அளவிற்கு வளைக்கலாம்.



Handleஐ வெளிக்கமாக இழுக்கும் பொழுது வளைவின் தோற்றம்.

**2)** ஒரு Handleஐ வெளிப்பக்கமாகவோ அல்லது உட்பக்கமாகவோ இழுத்தால் கோடு வளைவதை கண்ணால் பார்த்து தேவையான அளவிற்கு வளைக்கலாம்.



Handleஐ வெளி பக்கமாக இழுத்த பிறகு வளைவின் தோற்றம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.



Handleஐ உட்பக்கமாக இழுக்கும் பொழுது வளைவின் தோற்றம்.



Handleஐ உட்பக்கமாக இழுத்த பிறகு வளைவின் தோற்றம்.

**Smooth Node:**

இது Symmetrical Node போலவே செயல்படும். ஒரே ஒரு வித்தியாசம் Controller Line Nodeன் இருபக்கமும் சமமாக இருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. இரண்டு Controller Lineகளில் ஒன்றை நீளமாகவும் மற்றதை குட்டையாகவும் மாற்றி பயன்படுத்தலாம்.




Handleஐ Nodeஐ சுற்றி Rotate செய்யும்பொழுது இரண்டு பக்கமும் வளைவுகள் தோன்றும். அவ்வாறு தோன்றும் வளைவுகள் Controller Line நீறத்திற்கு தகுந்தவாறு இருக்கும்.




நீளமாக இருக்கும் பக்கம் அதிகமான வளைவும் குறைவாக உள்ள பக்கம் குறைவான வளைவும் உருவாகும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.



Controller Line நீளத்திற்கு தகுந்தவாறு கோடுகளில் வளைவுகள் உருவாவதை காணலாம்.



## Cusp Node:

இந்த Node மற்ற இரண்டு Nodeகள் இருந்தும் முற்றிலும் மாறுபட்டது.

இதன் Controller Lineகளைதனித்தனியாக செயல்படுத்தலாம். இரண்டும் ஒரே நேர்க்கோட்டில் இருக்க வேண்டும் என்பது கிடையாது. இரண்டு Controller Lineகளும் வெவ்வேறு கோணங்களில் இருக்கலாம்.

ஒரு Handleஐ மட்டும் நீட்டலாம், குறைக்கலாம், சுழற்றலாம். அதற்கு தகுந்தவாறு அதனுடைய கோட்டில் வளைவு உண்டாகும்.






Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

அதாவது ஒரு Handleஐ உட்பக்கமாகவோ அல்லது வெளிப்பக்கமாகவோ நகர்த்தினால் அடுத்த Handleல் நகராது.




ஒரு Handleஐ வெளிப்பக்கமாக நகர்த்தினால் அந்த பக்கத்து கோட்டில் மட்டும் வளைவு வெளிப்புறமாக உருவாகும். எதிர் திசையில் எந்த மாற்றமும் இருக்காது.




வலது பக்க கோடு மட்டும் வளைக்கப்பட்டுள்ளது.




இடது பக்க கோட்டை வளைக்கும் பொழுது தோற்றம்.




இடது பக்க கோடு வளைக்கப்பட்ட பிறகு



ஆரம்பத்தில் ஊள்ள Curveவை இவ்வாறும் வளைக்கலாம்

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Adding, Deleting Nodes:

தேவைப்பட்டால் புதிய Nodeகளை உருவாக்கலாம். ஒரே வட்டத்தில் தேவைப்படும் இடத்தில் கிளிக் செய்யவும். உடனே ஒரு கரும் புள்ளி தோன்றும்.

அடுத்து Property Barல் (+) என்பதை கிளிக் செய்யவும்.

தேவை இல்லாத Nodeஐ Delete செய்ய அந்த Nodeஐ கிளிக் செய்து Property Barல் **(-)** என்பதை கிளிக் செய்யவும் அல்லது Del கீயை அழுத்தவும்.

## Selection & More Nodes: *அநேக Nodeகளை செலக்ட் செய்தல்*

சில நேரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட அல்லது அனைத்து Nodeகளையும் செலக்ட் செய்ய வேண்டிவரும்.

Pick Toolஆல் எல்லாவற்றையும் செலக்ட் செய்யலாம். எல்லா Nodeகளையும் ஒரே நேரத்தில் Stretch செய்வதற்கும் Rotate செய்வதற்கும் இது பயன்படும்.

## Convert to Curves: Ctrl + Q

இது Property Barல் கடைசியாக ஒரு வட்டம் போல தோன்றும். Curveகளை உருவாக்க இது மிகவும் அவசியமான Tool.

சாதாரணமாக Ellipseல் ஒரு Nodeதான் தோன்றும். இதை கிளிக் செய்த உடன் நான்கு Nodeகள் உருவாகும்.

அதே போல ஒரு Rectangleன் நான்கு மூலைகளிலும் நான்கு Nodeகள் தோன்றும்.

இதை கிளிக் செய்த உடன் அந்த Nodeகளை Edit செய்யலாம்.

ஒவ்வொரு எழுத்திலும் ஒரு Node காணப்படும். இதை கிளிக் செய்த உடன் அநேக Nodeகள் தோன்றும்.

இவ்வாறு Nodeகளை உருவாக்க முதலில் Convert to Curveஐ கிளிக் செய்து பிறகு Shape Toolஐ கிளிக் செய்ய வேண்டும். இதனால் Nodeகளை எளிதாக Edit செய்யலாம்.


### ஓர் அன்பான வேண்டுகோள்

இந்த புத்தகம் படிப்பவர்களுக்கு புரியும்படியாகவும், படித்ததை செயல்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மிகவும் கடினமான உழைப்பினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே இதை படிப்பவர்கள் தயவுசெய்து **Xerox** எடுக்க அனுமதிக்க வேண்டாம் என உங்களை அன்புடன் வேண்டி கேட்டுக் கொள்கின்றேன்.

**இப்படிக்கு தங்கள் பேராதரவை என்றும் விரும்பும்**
**ஆசிரியர்**
***Semmangudi Gopalakrishnan. V** alias **GK***

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Toolகள்

இனி Tool Boxல் உள்ள Toolகளின் பயன்பாடு பற்றி பார்ப்போம்.

## Pick Tool



அதிக அளவில் பயன்படக்கூடிய முக்கியமான Tool. மனிதனுக்கு வலது கை பயன்படுவது போல் Corel Drawற்கு இந்த Pick Tool மிகவும் பயன்படக்கூடிய Tool ஆகும்.




Pick Toolற்கான Property Bar

இதை செலக்ட் செய்து வரைந்த படத்தை நகர்த்தலாம். படத்தில் தேவையான மாற்றங்களை செய்யலாம். படத்தை Rotate செய்யலாம். படத்தின் அளவை மாற்றலாம். பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ மாற்றலாம். தேவையான Toolஐ செலக்ட் செய்யலாம். வரைந்த படங்களில் மாற்றங்கள் செய்ய அவற்றை செலக்ட் செய்யலாம்.

முதலில் Rectangle Tool மூலம் ஒரு கட்டம் வரையவும்.



அடுத்து இந்த Toolஐ கிளிக் செய்து கட்டத்தின் மீது Click செய்தால் கட்டம் செலக்ட் ஆகிவிடும். கட்டத்தை சுற்றி 8 புள்ளிகளும் மற்றும் நடுவில் ஒரு **X** குறியும் தோன்றும்.



மவுஸ் பாயிண்டரை நடுவில் உள்ள **X** குறியின் மீது அழுத்தியவாறு Drag செய்து எங்கு வேண்டுமானாலும் கட்டத்தை நகர்த்தலாம்.

கட்டத்தை சதுரமாக மாற்றலாம். செவ்வகமாக மாற்றலாம்.



Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

படத்தின் மீது மவுசை வைத்து இரண்டு முறை கிளிக் செய்யவும்.

அதாவது Double Click செய்யவும். உடனே கட்டத்தை சுற்றி கீழ்க்கண்டவாறு Arrowகள் தோன்றும்.



கட்டத்தின் நடுவிலும் ஒரு வட்டம் நடுவில் புள்ளியுடன் தோன்றும். வளைவாக உள்ள Arrowவில் மவுஸ் பாயிண்டரை வைத்து நகர்த்தினால் Rotate ஆகும்.



**குறிப்பு:** கீழ் கண்ட செயல்களை Corel Draw 12ல் Pick Toolல் செய்ய இயலாது.

ஆனால் Free Transform Toolல் செய்யலாம். Corel Draw 10ல் இந்த Pick Toolலிலேயே செய்யலாம்.

கட்டத்தை சுற்றியுள்ள புள்ளிகளை Drag செய்து Cornerகளில் வளைவுகளை உருவாக்கலாம்.



படங்களை சாய்வாக (Skew) தோன்றச் செய்யலாம்.



Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

இவ்வாறு சதுரத்தை வட்டமாக மாற்றலாம்.



இவ்வாறு சதுரத்தை கீழ்கண்ட வடிவங்களிலும் மாற்றலாம்.



வரையப்பட்ட ஒரு Objectல் Property Bar முலம் கீழ்கண்டவாறு மாற்றங்களை செய்யலாம்.




**Net Working - LAN Books (2 Volumes)**

வங்கிகள், அலுவலகங்கள், Browsing Center ஆகியவற்றில் உள்ளது போல அனேக கம்ப்யூட்டர்களை இணைத்து ஒரு LAN நெட்ஒர்க்கை மிகவும் சுலபமாக அமைக்கலாம்.

**Volume - 1. Free 3 VCDs.**

Networking Fundamentals,Topology, HUB/Switch,Peer to Peer, IP Address, Subnet Mask, Network Configuration, Network Printer, Wireless LAN, Wireless Internet.

**Volume -2 (Admin. 2003 Server) Free 3 DVDs.**

2003 Server Installation Live, MMC, Users, Groups, Permissions, Rights, Account Policy, Audit Policy, DHCP, DNS, upgrade to Domain Controller, Terminal Server, Thin Client

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## **Shape Tool** (7 Tools)

மொத்தம் 7 Toolகள் உள்ளன.




1) Shape Tool
2) Knife Tool
3) Erase Tool
4) Smudge
5) Roughen Brush
6) Free Transform Tool
7) Virtual Segment Delete

## **Shape Tool:**



வரைந்த ஒரு Objectஐ விருப்பட்ட வடிவத்திற்கு மாற்றலாம். அதாவது அந்த Objectன் shapeஐ மாற்றலாம். உதாரணத்திற்கு ஒரு கட்டத்தை ஒரு நீள வட்டமாக மாற்றலாம். Objectஐ Select செய்தால் சுற்றி புள்ளிகள் தோன்றும். இந்த Toolஐ Select செய்த உடன் மவுஸ் பாயிண்டர் முக்கோண வடிவில் மாறிவிடும். புள்ளியை மவுஸ் பாயிண்டரால் Drag செய்து தேவையான Shapeஐ உருவாக்கலாம்.



செவ்வகம் அல்லது சதுர வடிவங்களை select செய்தால் இவ்வறு நான்கு மூலைகணிலும் சதுர வடிவ கரும்புள்ளிகள் தோன்றும்

வட்டங்களை select செய்தால் இவ்வாறு ஒரே ஒரு புள்ளி தோன்றும்

Polygon வடிவங்களை select செய்தால் இவ்வாறு சிறிய புள்ளிகள் தோன்றும்

முதலில் ஒரு செவ்வகம் வரையவும். அடுத்து Shape Toolஐ செலக்ட் செய்து அந்த கட்டத்தின் மீது கிளிக் செய்தால் உடனே புள்ளிகள் தோன்றும். அடுத்து ஏதாவது ஒரு புள்ளியை மவுஸ் பாயிண்டரால் Drag செய்யவும். உடனே வட்டமாக மாறுதை காணலாம்.




இதே போல Polygonஐ வரைந்து அதன் Shapeஐ மாற்றலாம்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Knife Tool 

இது ஒரு சாதாரண கூர்மையான கத்தி போல பயன்படுகிறது, ஒரு படத்தின் குறிப்பிட்ட தேவையான பகுதியை மட்டும் வெட்டி எடுக்கலாம்.

ஒரு கட்டத்தை வரைந்து அதில் தேவையான நிறத்தினை Fill செய்து பிறகு அதை இரண்டாக பிரிக்கலாம்.

முதலில் ஒரு வட்டத்தை வரைந்து ஒரு நிறத்தை Fill செய்யவும்.

இப்பொழுது Knife Toolஐ செலக்ட் செய்யவும். மவுஸ் பாயிண்டர் கத்தி முனைபோல மாறிவிடும்

வெட்ட வேண்டிய பகுதியை மேல் பக்கத்தில் கிளிக் செய்து Drag செய்து கீழ் பக்கத்தில் முடிக்கவும். இப்பொழுது குருக்காக ஒரு கோடு தோன்றும். அதாவது வெட்டப்பட்டு இருப்பதை காணலாம்.



மவுஸ் பாயிண்டரால் கீழ்ப்பகுதியை செலக்ட் செய்து கொஞ்சம் நகர்த்தலாம்.

இரு துண்டுகளாக காணப்படும்.



வெட்டப்பட்ட பிறகு இரண்டு பகுதியிலும் வெவ்வேறு நிறங்களை Fill செய்யலாம்.



ஒரு வட்டத்தில் தேவையான பகுதியை மட்டும் வெட்டி தனியாக எடுக்கலாம்




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Erase Tool 

வரைந்த படங்களில் நடுவிலோ அல்லது தேவைப்படும் இடத்தில் அழித்து வெற்றிடமாக தோன்றச் செய்யலாம். வட்டமாக அழிக்கலாம். சதுரமாக அழிக்கலாம். ஒரு சாதாரண ரப்பரை போல முன்னும் பின்னும் நகர்த்தி அழிக்கலாம்.

ஒரு வட்டத்தை வரைந்து ஒரு நிறத்தை Fill செய்யவும்.



இந்த Toolஐ செலக்ட் செய்யவும். உடனே மவுஸ் பாயிண்டர் ரப்பர் முனை போல மாறிவிடும். ரப்பர் முனையை கட்டத்தில் தேவைப்படும் இடத்தில் வைத்து Double Click செய்யவும். உடனே அங்கு ஒரு சிறிய வட்டம் நிறம் இல்லாமல் ஒரு துளை போல உருவாகும். Property Barல் சதுரமாக உள்ள Optionஐ செலக்ட் செய்து Double Click செய்தால் துளை சதுரமாக தோன்றும்.

### Eraser Thickness

ரப்பரின் வட்டத்தின் அளவை கூட்டவோ அல்லது குறைக்கவோ செய்யலாம்.







ரப்பரால் அழிக்கப்பட்ட படங்கள்

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Smudge Tool

வட்டம் அல்லது கட்டத்தை சுற்றி கொம்பு வடிவில் வரைய இது உதவுகிறது.



இதை drag செய்து வரையும்பொழுது ஒரு பக்கம் கூர்மையாகவும் மறு பக்கம் இரண்டு கோடுகள் அகலமாகவும் உருவாகும். முனையை கூர்மையாகவோ மழுப்பலாகவோ உருவாக்கலாம்.



இந்த கூர்மையான தோற்றத்தை வேண்டிய நீளத்திற்கு வரையலாம். உட்பக்கமாக வரையலாம். வெளிப்பக்கமாக வரையலாம். இதற்கான Optionகள் Property Barல் உள்ளன.




சூரியனை சுற்றி கதிர்கள் போல வரையலாம்



3 விதமான NIB Sizeகள்

இந்த Toolஐ கிளிக் செய்த உடன் மவுஸ் பாயிண்டர் ஒரு சிறிய நீளவட்டமாக நடுவில் புள்ளியுடன் தோன்றும். இது NIB என அழைக்கப்படும். இந்த NIB Sizeஐ கூட்டலாம் அல்லது குறைக்கலாம்.




வெளிப்பக்கமாக வரைய நடுப் புள்ளியை கோட்டிற்கு உட்புறமாக வைத்து Drag செய்ய வேண்டும்.



வெளிப்பக்கம் வரைய

உட்பக்கமாக வரைய நடுப் புள்ளியை கோட்டிற்கு வெளியே வைத்து Drag செய்ய வேண்டும்.



உட்பக்கம் வரைய

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

Property Bar of Smudge Tool




1) Nib Size
2) Add Dryout to the effect
3) Enter a Fixed value for the tilt setting
4) Enter a Fixed value for the bearing setting

## Roughen Brush Tool



வட்டம் ஒரு Line அல்லது கட்டத்தில் உள்ள Outlineஐ கீழ்க்கண்டவாறு கூர் கூராக தோன்றச் செய்யலாம்.



இதே Toolஐ செலக்ட் செய்து கோட்டின் மீது Drag செய்தால் மேற்கண்டவாறு மாறிவிடும். இதில் தோன்றும் கூர்மையான முனைகளை Spike என்பர்.

இந்த Toolஐ கிளிக் செய்த உடன் மவுஸ் பாயிண்டர் ஒரு சிறிய நீளவட்டம் நடுவில் ஒரு கோடுடன் தோன்றும். இது NIB என அழைக்கப்படும். இந்த NIB Sizeஐ கூட்டலாம் அல்லது குறைக்கலாம். Property Barல் இந்த Spikeகளின் தோன்றத்தை மாற்ற Optionகள் உள்ளன.




Property Bar




1) Nib Size - Spikeன் அகலத்ததை கூட்ட/குறைக்க
2) Enter Value for frequency of spike - Spikeகளின் Frequencyஐ கூட்ட/ குறைக்க
3) Add Dryout to the effects - Spikeகளின் எண்ணிக்கையை கூட்ட/ குறைக்க
4) Enter a Fixed value for tilt setting - Spike கோணத்தை மாற்ற
5) Auto/Fixed Direction - Spike திசையை மாற்ற

மூன்று என்ற இடத்தில் எண்களை மாற்றினால் ஒரு நேர் கோடு இவ்வாறு மாறி தோன்றும்



1Setting　　5 Setting　　10 Setting

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Vertual Segment Delete Tool:



இது கத்தியின் முனை போல் உள்ளது. வரையப்படும் ஓவியங்களில் தேவையில்லாமல் சில கோடுகள் குறுக்கும், நெடுக்குமாக தோன்றும். அவ்வாறு வேண்டாத கோடுகளை அகற்ற இது உதவுகிறது. தேவை இல்லாத கோட்டின் மீது வைத்தால் கத்தி முனை கோட்டின் மீது பட்டவுடன் கத்தி செங்குத்தாக தோன்றும். கிளிக் செய்தால் உடனே அந்த சிறிய கோடு மறைந்து விடும்.

**முக்கியமாக கவனத்தில் கொள்க.**

தேவை இல்லாத சிறிய கோடுகளை அகற்றும். முழு உருவத்துடன் குறுக்கு கோடு இல்லாமல் இருந்தால் முழு உருவமும் மறைந்து விடும். அவ்வாறு ஒரு குறிப்பிட்ட கோட்டை அகற்ற அருகில் ஒரு புதிய கோட்டை வரைந்து திரும்ப அகற்றவேண்டும்.

இங்கு கீழே உள்ள 1 என்ற Objectல் இரண்டு கோடுகள் மேல்பக்கமாக உள்ளன. அவைகளை அகற்ற வேண்டும். இந்த Toolஐ ஒரு கோட்டின் மீது வைத்து Click செய்தால் மொத்த உருவமும் காணாமல் போய்விடும்.

எனவே 2 என்ற Objectல் உள்ளவாறு குருக்காக ஒரு கோடு போடவும். இப்பொழுது நான்கு கோடுகள் உள்ளன.




Step 1




Step 2




Step 3

இனி ஒரு கோட்டின் மீது இந்த Toolஐ வைத்து Click செய்யவும். அந்த கோடு மட்டும் Delete ஆகிவிடும். இவ்வாறு ஒவ்வொரு கோடாக Delete செய்யவும்.



Step 4



Step 5




Step 6

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Free Transform Tool

வரைந்த ஒரு படத்தை (உருவத்தை) புதுவிதமான வடிவில் மாற்றி தோன்றச் செய்யலாம். உருவத்தையே மாற்றிவிடலாம். இதற்கான Property Barல் நான்கு Optionகள் உள்ளன.

1) Free Rotation
2) Free Angle Rotation
3) Free Scale
4) Free Scew




### 1) Free Rotation:

இதை செலக்ட செய்து படத்தை விரும்பிய திசைக்கு திருப்பலாம். ஒரு கட்டத்தை வரைந்து செலக்ட் செய்யவும்.

அடுத்து இந்த Toolஐ கிளிக் செய்து Property Barல் உள்ள Free Rotationஐ செலக்ட் செய்யவும். உடனே மவுஸ் பாயிண்டர் Plus குறி ( + ) போல மாறிவிடும்.

மவுஸால் ஒரு மூலையில் Click செய்து விரும்பிய திசைக்கு திருப்பலாம். இவ்வாறு செய்ய Property Barல் முதலாவதாக உள்ள Free Rotation என்பது Select செய்யப்பட்டு இருக்க வேண்டும் என்பதை மனதில் கொள்க.



இவ்வாறு இருப்பதை

இவ்வாறு திருப்பலாம்.



இவ்வாறு இருப்பதை

இவ்வாறு திருப்பலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 2) Free Angle Reflection



ஒரு உருவம் கண்ணாடியில் பிரதலிப்பது போலவே தெரிய வைக்கலாம். முதலில் ஒரு உருவத்தை செலக்ட் செய்யவும்.

அடுத்து இந்த Free Transform Toolஐ செலக்ட் செய்து விருப்பப்படி Rotate செய்யவும்.

Property Barல் உள்ள Free Angle Reflection என்பது செலக்ட் செய்யப்பட்டு இருக்க வேண்டும் என்பதை மனதில் கொள்க.




**Computer Hardware Books**

**மொத்தம் 3 புத்தகங்கள், 10 DVDகள், 1CD**

Hardware சம்பந்தமான அனைத்து விஷயங்களும் விளக்கப்பட்டுள்ளன. நீங்கள் ஒரு Computer Centerல் சேர்ந்து படிப்பது போன்ற ஒரு உணர்வு பெறுவீர்கள். நீங்கள் தன்னந்தனியாக ஒரு சிஸ்டத்தை அசம்பிள் செய்யலாம். Service செய்யலாம். எந்தவிதமான பிரச்சினைகளையும் சமாளிக்கலாம். நீங்கள் மட்டும் இல்லாமல் உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் மிகவும் சுலபமாக கற்று செயல்படுத்தலாம். மொத்தத்தில் ஒரு Service Engineer செய்கின்ற வேலைகள் அனைத்தையும் நீங்களே செய்துவிடலாம். நீங்களும் ஒரு Computer Service Engineer ஆக மாறிவிடலாம்.

இந்த புத்தகங்கள்,VCD,DVDக்களில் **Complete Hardware Course.**அடங்கி உள்ளது.

Volume 1 Book with Free 3 DVDs
Volume 2 Book with Free 3 VCDs
Volume 3 Book with Free 4 DVDs

Courier Charge Extra Rs.50/- per Book

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Free Scale

ஒரு உருவத்தை சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ மாற்றம் செய்யலாம்.

ஒரு வட்டம் வரையவும். அடுத்து அந்த வட்டத்தை Pick Toolலால் செலக்ட் செய்யவும். பிறகு இந்த Free Transform Toolஐ செலக்ட் செய்யவும். அடுத்து Property Barல் மூன்றாவதாக உள்ள Free Scale என்பதை செலக்ட் செய்யவும்.

வட்டத்தின் மீது Drag செய்யும் பொழுது நீல நிற வட்டம் தோன்றும். Drag செய்து தேவையான அளவிற்கு வட்டத்தை சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ மாற்றலாம். நமக்கு வேண்டிய Sizeஐ நீல கட்டத்தின் மூலம் தீர்மானிக்கலாம்.







## Free Skew

Property Barல் உள்ள Free Skew என்கிற Optionஐ செலக்ட் செய்து விருப்பப்படி Shapeஐ மாற்றலாம். ஏற்கனவே வரைந்த Shapeலும் மாற்றம் செய்யலாம்.

Property Barல் உள்ள Free Skew என்பதை செலக்ட் செய்யவும். இந்த Toolஐ Select செய்து படத்தின் மீது Drag செய்யும் பொழுது ஒரு நீல நிற கட்டம் தோன்றும். அதை விருப்பப்படி Drag செய்து Shapeஐ மாற்றவும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Zoom Tool** (2 Tools)

1) Zoom Tools

2) Hand Tool



1) **Zoom Tool:**

வரைந்த படங்களை சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ தோன்றச் செய்யலாம். படத்தின் உண்மையான அளவில் (Actual Size)ல் எந்த மாற்றமும் இருக்காது. நாம் ஒரு பகுதியில் துல்லியமாக வேலை செய்ய அந்த பகுதியை பெரியதாக தோன்றச் செய்யலாம். அதாவது ஒரு படத்தை அதன் அளவில் இருந்து பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ மாற்ற இந்த Tool பயன்படாது.

இதை செலக்ட் செய்த உடன் அந்த Toolல் ஒரு பள்ளம் தோன்றும். மேலும் மவுஸ் பாயிண்டர் பூதக்கண்ணாடி போல மாறிவிடும்.

படம் பெரியதாக தோன்றச் செய்ய படத்தின் மீது வைத்து கிளிக் செய்தால் படம் பெரியதாக தோன்றும்.

திரும்ப திரும்ப கிளிக் செய்தால் பெரியதாகிக் கொண்டே போகும்.

படத்தை சிறியதாக தோன்றச் செய்ய Shift கீயை (Shift + Click) அழுத்தியவாறு கிளிக் செய்யவும்.

இதை செலக்ட் செய்த உடன் Property Barல் கீழ்க்கண்டவாறு தோன்றும்.




Property Barல் உள்ள இதற்கான ஐகான்கள் மூலமும் செயல்படுத்தலாம்.

**குறிப்பு:** இந்த Toolஐ செலக்ட் செய்த உடன் மவுஸ் பாயிண்டர் பூதக்கண்ணாடி உருவத்தில் Plug குறி (+) உடன் காணப்படும். படத்தின் மீது மவுசை வைத்து ஆள்காட்டி விரலால் ஒரு முறை Press செய்தால் படம் பெரியதாக மாறிவிடும். அதே போல் வலது பட்டனை Press செய்தால் பூதக்கண்ணாயில் Minus ( – ) குறி தோன்றும். கையை எடுத்தவுடன் படம் சிறியதாக மாறும். ஒரு படத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் கிளிக் செய்து அந்த இடத்தை சிறியதாகவோ, பெரியதாகவோ தோன்றச் செய்யலாம்.

2) **Hand Tool:**



Scroll Bar மூலம் செய்கின்ற அதே செயலை இதன் மூலம் செய்யலாம். படம் திரையை விட பெரியதாக இருந்தால் எந்த திசையில் வேண்டுமானாலும் நகர்த்தி பார்க்கலாம்.

இதை செலக்ட் செய்த உடன் மவுஸ் பாயிண்டர் கை போல மாறிவிடும். இதை செலக்ட் செய்த உடன் தோன்றும் இதற்கான Property Barல் உள்ள ஐகான்கள் மூலமும் செயல்படுத்தலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## **Free Hand Tool** (8Tools)

இதில் மொத்தம் 8 Toolகள் உள்ளன




1) Free Hand Tool
2) Bazier Tool
3) Artistic Media Tool
4) Pen Tool
5) Polyline Tool
6) 3 Point Curve Tool
7) Interactive Connector Tool
8) Dimension Tool

### 1) **Free Hand Tool**:

ஒரு பென்சிலால் படம் வரைவது போல இந்த Toolஐ பயன்படுத்தி படங்களை வரையலாம்.



கோடுகளின் Thicknessஐ கூட்டலாம் குறைக்கலாம். கோடுகளின் மேல் முனை, கீழ்முனைகளில் அநேக விதமான Arrowக்களை சேர்க்கலாம். வளைவுகோடுகளை வரைந்த பிறகு இரு முனைகளையும் இணைக்கலாம்.

**நேர்க் கோடு வரைதல்**

முதலில் ஒரு இடத்தில் கிளிக் செய்யவும். அடுத்து மவுசை பட்டனை அழுத்தாமல் தேவையான நீளத்திற்கு தேவையான திசையில் Move செய்து கிளிக் செய்தால் ஒரு நேர்க்கோடு உருவாகிவிடும்.

இந்த Toolஐ Select செய்த உடன் மவுஸ் பாயிண்டர் கீழ்க்கண்டவாறு தோன்றும்.





வளைவான கோடுகள்



இரண்டு முனைகளும் இணைக்கப்பட்ட பின்பு



ஒரு கோடு வரையப்பட்டு இரண்டு புறமும் Arrowகள் சேர்க்கப்பட்டுள்ளன. கோட்டின் Thicknessசும் மாற்றப்பட்டுள்ளது.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Property Bar of Free Hand Tool




E

முதலில் ஒரு கோடு போல வரைந்து பிறகு இவ்வாறு மாற்றப்பட்டுள்ளன.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 2) **Bezier Tool:**



மிகவும் நுணுக்கமாக படங்களை வரையலாம். பிரபல கம்பெனிகளின் Logoக்களை Trace செய்வது போல வரையலாம். Shape Toolயும் பயன்படுத்தி வளைவுகளை துல்லியமாக உருவாக்கலாம். நேர்கோடுகளை வரையலாம். வளைவு கோடுகளை வரையலாம். இதை சாதாரணமாக Pencil போல பயன்படுத்த இயலாது. புள்ளி வைத்து கோலம் போடுவது போல பயன்படுத்த வேண்டும்.

இந்த Toolஐ கிளிக் செய்த உடன் மவுஸ் பாயிண்டர் அருகில் உள்ளவாறு மாறிவிடும்.



முதலில் ஒரு இடத்தில் கிளிக் செய்யவும். ஒரு புள்ளி கருப்பு நிறத்தில் சதுரமாக தோன்றும். அடுத்து சிறிது தூரம் மவுசை நகர்த்தி கிளிக் செய்யவும். உடனே கிளிக் செய்த இடத்தில் இருந்து முதல் புள்ளிக்கு ஒரு நேர் கோடு உருவாகும். அடுத்து ஒரு இடத்தில் கிளிக் செய்தால் கிளிக் செய்த இடத்தில் இருந்து 2வது புள்ளிக்கு ஒரு கோடு உருவாகும்.




இவ்வாறு ஒவ்வொரு தடவையும் கிளிக் செய்யும் பொழுது கடைசி புள்ளியுடன் நேர் கோடு உருவாகும். கடைசியாக உள்ள புள்ளி கருப்பு நிறத்தில் சதுரமாக தோன்றும்.



கோடுகள் வரைந்தவரை போதும் என்றால் திரும்ப Toolஐ கிளிக் செய்ய வேண்டும்

தனித்தனியாக பயன்படுத்தலாம். இரண்டை பயன்படுத்தலாம். மூன்றையுமே பயன்படுத்தலாம். ஒரு எழுத்து, ஒரு வார்த்தை, ஒரு வரி, ஒரு பாரா எனவும் பயன்படுத்தலாம்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 7) Horizontal Alighment :




Property Barல் உள்ள Pull Downஐ கிளிக் செய்தால் இந்த விண்டோ தோன்றும். இதில் 6 விதமான Optionகள் உள்ளன. முதலில் உள்ள None எந்த மாற்றமும் இல்லை என்பதை குறிப்பிடுகிறது. பாக்கி 5 Alignmentகள் பற்றி கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

முதலில் எழுத்துக்களை செலக்ட் செய்ய வேண்டும். அதன் பிறகு தேவையான Alignmentஐ கிளிக் செய்தால் மாறிவிடும். அல்லது Shortcut கீகளை பயன்படுத்தலாம்.




***Left Alignment***




***Center Alignment***




***Right Alignment***




***Full Alignment***




***Force Full Alignment***

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 8) Decrease Indent:

Indent என்றால் Marginல் இருந்து வரிகளை உள்ளே நகர்த்துதல். அவ்வாறு வரிகள் உள்ளே தள்ளி இருந்தால் Cursorஐ ஆரம்ப எழுத்தின் முன்பு வைத்து இதை கிளிக் செய்தால் Margin பக்கமாக வரி நகரும்.




Indent செய்யப்பட்டது

Original




Decrease Indent செய்யப்பட்ட பின்பு

After Change

## 8) Increase Indent:

Margin உடன் ஒட்டி உள்ள வரிகளை கொஞ்சம் உள்ளே தள்ளி வைக்க பயன்படுகிறது. Cursorஐ முதன் எழுத்தில் முன்பு வைத்து இதை கிளிக் செய்தால் உடனே அந்த வரி உள்ளே ஒரு Step நகரும். ஒவ்வொரு தடவை கிளிக் செய்யும் பொழுதும் உள்ளே ஒரு Step நகரும்.




Increase Indent செய்வதற்கு முன்பு

Original




Increase Indent செய்யப்பட்ட பின்பு

After Change

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

இதே செயலை வேறு விதமாகவும் செய்யலாம். எழுத்துகளை அடிக்க Text Toolஐ செலக்ட் செய்து Drag செய்கிறோம். உடனே ஒரு கட்டம் தோன்றுகிறது. அந்த கட்டத்தற்கு தகுந்தபடி மேல்பக்க ஸ்கேலில் மூன்று பட்டன்கள் தோன்றுவதை காணலாம். அவைகளை மவுஸால் Drag செய்து நகர்த்தலாம்.




**பட்டன் 1:** ஒவ்வொரு பாராவிலும் முதல் வரியை Indent செய்ய

**பட்டன் 2:** ஒவ்வொரு பாராவிலும் முதல் வரியை தவிற மற்ற வரிகளை Indent செய்ய

**பட்டன் 3:** ஒவ்வொரு பாராவிலும் வலது பக்க வரிகளை Indent செய்ய

**Tab Setting:** நடுவில் காணப்படும் **L** போன்ற குறியீடுகள்




***Indent செய்வதற்கு முன்பு***




***முதல் வரி Indent செய்யப்பட்டுள்ளது.***




***முதல் வரியுடன் மற்ற வரிகளும் Indent செய்யப்பட்டுள்ளன.***

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 9) Show Bullets / Hide Bullets: (Ctrl + M)



ஏற்கனவெ Bullet கொடுக்கப்பட்டு இருந்தால் எழுத்துக்களை செலக்ட் செய்து இதை கிளிக் செய்தால் மறையும். திரும்ப கிளிக் செய்தால் தோன்றும்.

Show என்றால் காண்பித்தல். Hide என்றால் மறைத்தல். ஒரு தடவை கிளிக் செய்தால் காண்பிக்கும். திரும்ப கிளிக் செய்தால் மறையும்.




***With Bullet***




***Without Bullet***

## 11) Show/Hide Drop Cap:



Drap Cap என்றால் ஒரு பாராவில் உள்ள முதல் வரியின் முதல் எழுத்தை 2 அல்லது 3 வரிகளின் உயரத்திற்கு பெரியதாக தோன்றச் செய்தல்.

Paraவை செலக்ட் செய்து இந்த Optionஐ கிளிக் செய்தால் முதல் எழுத்து பெரியதாக தோன்றும். திரும்ப கிளிக் செய்தால் பழையபடி மாறிவிடும்.




***Before Click***




***After Click***

## 12) Non Printing Characters:



ஒரு Paraவில் வார்த்தைகளுக்கு இடையே புள்ளிகள் தோன்றும். மேலும் ஒரு வார்த்தை பிரிக்கப்பட்டு காண்பிக்கப்படும்போது வரியின் முடிவில் ஒரு குறியீடு தோன்றும். இவைகள் பிரிண்ட் செய்யும் போது Print ஆகாது.

எனவே இவைகளை Non Print Characters என்பர். இந்த Optionஐ கிளிக் செய்தால் தோன்றும். திரும்ப கிளிக் செய்தால் மறையும்.




***Without Non Printing Characters***




***With Non Printing Characters***

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 13) Format Text: (Ctri + T)




இது Property Barல் வலது பக்கத்தில் உள்ளது. Text Toolஐ செலக்ட் செய்தால் Property Barல் தோன்றும் அனைத்து Optionகளையும் இதில் செய்யலாம். இதை கிளிக் செய்தவுடன் கீழ்க்கண்ட விண்டோ தோன்றும். இங்கு ஐந்து Tabகள் இருப்பதை காணலாம்.




## 1) Character Tab:

**எழுத்து, வார்த்தை, வரிகளில் செய்ய வேண்டிய அனைத்து மாற்றங்களையும் செய்யலாம். உதாரணம்.** Font, Font Size, Underline.




***தேவையா Fontஐ செலக்ட் செய்ய Font Style Window***

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 2) Paragraph Tab:

ஒரு Paraவில் செய்ய வேண்டிய மாற்றங்களை செய்யலாம்.

உதாரணம் Alignmentகள் (Left, Right, Centre)




## 3) Tabs Tab:

இந்த விண்டோவில் Tabulation என்ற செயலை பயன்படுத்தலாம்.

Tabulation என்பது Column வாரியாக Statementகளை தயாரிக்க மிகவும் பயன்படக்கூடியது. இதை Tab Setting என்பர்.




GK

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 4) Columns Tab:

செய்தித்தாள்கள், வார இதழ்கள் போன்றவற்றில் விவரங்கள் ஒவ்வொரு பக்கத்திலும் பல Columகளில் அடிக்கப்பட்டுள்ளன. அதே போல தகவல்களை அநேக Columnகளில் தோன்றச் செய்ய இந்த விண்டோ உதவுகிறது.




*ஒரு பக்கத்திற்கு ஒரு **Column***

GK

***Number Columns***




*ஒரு பக்கத்திற்கு இரண்டு **Column**கள்*

***Column**த்தின் அகலம்.*

***Column**களுக்கு நடுவில் உள்ள இடைவெளி*

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 5) Effects Tab:

இந்த விண்டோ மூலமாக Bullet, Drop Cap போன்ற Effectகளை கொண்டு வரலாம். இவைகளை செயல்படுத்த Effect Type என்ற Pull Down மெனுவில் செலக்ட் செய்ய வேண்டும்.




*இங்கு **Bullet** செலக்ட் செய்யப்பட்டுள்ளது.*




*இங்கு **Drop Cap** செலக்ட் செய்யப்பட்டுள்ளது.*

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Edit Text:** 

Text Toolஐ செலக்ட் செய்து Drag செய்தால் ஒரு கட்டம் தோன்றும். அந்தக் கட்டத்தில் எழுத்துக்களை அடிக்க கொஞ்சம் கடினமாக இருக்கும். அதற்கு பதிலாக Property Barல் உள்ள இதை கிளிக் செய்தால் உடனே Edit Text விண்டோ தோன்றும். இங்கு எல்லா தவல்களையும் அடிக்கலாம். மேலும் இங்கு எல்லாவிதமான Optionகளும் உள்ளன.

அடித்து முடித்த பிறகு OK பட்டனை கிளிக் செய்தால் அனைத்தும் கட்டத்திற்குள் வந்துவிடும். ஏற்கனவே அடித்து வைக்கப்பட்டதை Edit செய்யவும் இதை பயன்படுத்தலாம்.



Text Toolஐ செலக்ட் செய்து Drag செய்யவும். அடுத்து Edit Textஐ கிளிக் செய்யவும். உடனே கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.







அடிக்கப்பட்ட வரிகள் இந்த கட்டத்திற்கு வந்துவிடும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## **Interactive Blend Tool** (7 Tools)

இதில் மொத்தம் 7 Toolகள் உள்ளன.



1) Interactive Blend Tool
2) Interactive Distortion Tool
3) Interactive Contour Tool
4) Interactive Envelope Tool
5) Interactive Extrude Tool
6) Interactive Dropshadow Tool
7) Interactive Transparency Tool

### **1) Interactive Blend Tool:**



Blend என்றால் சேர்த்தல் என்று பொருள். இரண்டு படங்களை (Object) ஒன்றாக சேர்த்து மாற்றலாம். மேலும் ஒரு புதிய வடிவத்தை உருவாக்கலாம்.

இரண்டு கட்டங்களை வரைந்து கொள்ளவும் அடுத்து இந்த Toolஐ செலக்ட் செய்து ஒரு கட்டத்தில் இருந்து அடுத்த கட்டத்திற்கு Drag செய்யவும். உடனே ஒரு புதிய Object உருவாகிவிடும்.

இரண்டுமே கட்டங்களாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒன்று கட்டமாகவும் அடுத்தது வட்டமாக இருக்கலாம்.

இரண்டு Object களிலும் வெவ்வேறு நிறங்களை நிரப்பலாம். நடுவில் உள்ள கட்டங்களின் எண்ணிக்கையை கூட்டலாம், குறைக்கலாம். புதிய Objectஐ உருக்கலாம்.

Property Bar




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.










இதன் Presetல் 8 டிசைன்கள் Readymade ஆக உள்ளன.

இங்கு முதலில் உள்ள CCWise 20 step என்பது Counter Clockwiseல் 20 அடுக்குகள் என்று பொருள்.

அதே போல Cwiseஎன்றால் Clockwise என்று பொருள்

இரண்டு கட்டங்களை வரைந்து கொள்ளவும்.



அடுத்து இந்த Toolஐ செலக்ட் செய்து ஒரு கட்டத்தில் இருந்து அடுத்த கட்டத்திற்கு Drag செய்யவும். உடனே கீழ்கண்டவாறு ஒரு புதிய Object உருவாகிவிடும். இது Presetல் உள்ள 8வது டிசைன் Defaultஆக தோன்றும்



இனி Presetல் உள்ள 8 டிசைன்களை ஒவ்வொன்றாக செலக்ட் செய்து மாற்றங்களை பார்க்கவும். அடுத்த பக்கத்தில் இரண்டு டிசைன்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.



CCWise 20 Step

Presetல் முதலாவதை செலக்ட் செய்தால் இவ்வாறு தோன்றும்.



Straight 10 Step

Presetல் ஏழாவதை செலக்ட் செய்தால் இவ்வாறு தோன்றும்.






Number of Steps

Property Barல் Number of Steps என்ற இடத்தில் 50 என கொடுத்தால் இவ்வாறு தோன்றும்.




Blend Direction

அடுத்து Property Barல் Blend Direction என்ற இடத்தில் 90 என கொடுத்தால் இவ்வாறு தோன்றும்.








Loop Blend

அடுத்து Property Barல் உள்ள Loop Blend என்பதை Click செய்தால் இவ்வாறு தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.






அடுத்து Property Barல் Blend Direction என்ற இடத்தில180 என கொடுத்தால் இவ்வாறு தோன்றும்.

இவ்வாறு Property Barல் உள்ள மற்ற Optionகளை Click செய்து மாற்றங்களை பார்க்கவும்.

இப்பொழுது நாம் ஒரு Blend Effectஐ உருவாக்குவோம்.

இரண்டு சிறிய லட்டங்களை வரைந்து இரண்டிலும் தனித்தனி நிறங்களை Linearல் Fill செய்யவும்.





அடுத்து இந்த Interactive Blend Toolஐ செலக்ட் செய்து முதல் வட்டத்தில் இருந்து அடுத்த வட்டத்திற்கு Drag செய்யவும். உடனே கீழ்கண்டவாறு ஒரு புதிய Object உருவாகிவிடும்.





அடுத்து Property Barல் Blend Direction என்ற இடத்தில் 90 என கொடுத்துவிட்டு அதன் அருகில் உள்ள Loop Blend என்பதை Click செய்தால் இவ்வாறு தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.



அடுத்து Property Barல் Blend Direction என்ற இடத்தில180 என கொடுத்தால் கீழ்கண்டவாறு மாறி தோன்றும்.



அடுத்து Property Barல் Blend Direction என்ற இடத்தில 360 என கொடுத்தால் கீழ்கண்டவாறு மாறி தோன்றும்.



இவ்வாறு ஒரே Objectல் பல வடிவங்களை உருவாக்கலாம்.

## 2) **Interactive Contour Tool:**



Contour Effect என்பது ஒரு Objectற்கு Duplicateஐ அதற்கு உள்ளேயோ அல்லது வெளியிலோ உருவாக்குதல். அந்த Duplicate உருவம் Original Objectன் அளவில் இல்லாமல் Originalஐ விட சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ உருவாகும். Original மற்றும் Duplicateகளுக்கு மையப்புள்ளி மாறாது. ஒன்றுக்கு மேற்பட்டும் உருவாக்கலாம். வட்டம், கட்டம் போன்றவற்றில் பயன்படுத்தலாம். அவற்றில் நிறங்களை Fill செய்து பல டிசைன்களை உருவாக்கலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

இதன் Property Barல் உள்ள Presetல் 7 விதமான டிசைன்கள் Readymadeஆக உள்ளன. அவற்றை பயன்படுத்தி டிசைன்களை உருவாக்கலாம். தேவைப்பட்டால் நாம் புதிய டிசைன்களை உருவாக்கி Presetல் சேர்க்கலாம். இதற்கு Add Preset (+) என்பதை பயன்படுத்த வேண்டும். தேவை இல்லாதவற்றை Presetல் இருந்து Delete செய்யலாம். இதற்கு Delete Preset (-) என்பதை பயன்படுத்த வேண்டும்.

இங்கு கீழே 3 Duplicateகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவைகளின் தோற்றம் கீழே உள்ளன.




Property Bar




**1) Preset List:** Readymade ஆக உள்ள ஏழு விதமான டிசைன்கள்

**2) Add Preset, 3) Delete Preset, 4) Object Position, 5) Object size**

**6) To Center:** நடுவில் தோன்றச் செய்ய

**7) To Inside:** உட்புறமாக தோன்ற செய்ய

**8) To Outside :** வெளிப்புறமாக தோன்றச் செய்ய

**9) Contour Steps** - கோடுகளின் எண்ணிக்கையை கூட்ட/குறைக்க

**10) Contour Offset** - கோடுகளுக்கு நடுவில் இடைவெளி கூட்ட/குறைக்க.

**11) Linear Contour Color:** Linear Colorஐ உருவாக்க

**12) Clockwise Contour Color:**

**13) Counter Clockwise** - - நேர் எதிர் மறை

**14) Outline Color -** Outlineல் உள்ள கலரை Fill செய்ய.

**15) Fill Color-** உட்புறம் தேவையான Colorஐ Fill செய்ய.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**16) End Fountain Fill Color**

**17) Object & Color Acceleration**

**18) Copy Contour Properties -** Copy செய்து வேறு ஒரு Objectற்கு பயன்படுத்த

**19) Clear Contour -** செய்த மாற்றங்களைClear செய்ய (cancel செய்ய).

இப்பொழுது முதலில் நிறங்கள் இல்லாமல் ஒரு Objectஐ உருவாக்கி மாற்றங்கள் செய்வோம்.




முதலில் ஒரு Object ஐ வரையவும்.




இந்த Toolஐ செலக்ட் செய்து மேலே உள்ள புள்ளியில் (Node) இருந்து உட்புறமாக Drag செய்யவும். உடனே இவ்வாறு உரு துடுப்பு தோன்றும்.
அதை Fountain Mid Point என்பர்.

Drag செய்து முடித்த பிறகு அனேக Duplicateகள் உட்பக்கமாக கீழ்கண்டவாறு தோன்றும். இதில் 14 Duplicateகள் உள்ளன. Drag செய்யும் பொழுது Property Barல் உள்ள Counter Stepsல் உள்ள எண்ணின் அளவை பொருத்தது. இங்கு 14 என இருந்ததால் இதில் 14 Duplicateகள் தோன்றி உள்ளன.



14Duplicates (lines)

Property Barல் உள்ள Counter Steps மூலம் Duplicateகளின் எண்ணிக்கையை கூட்டலாம் /குறைக்கலாம். அல்லது துடுப்பின் நடுவில் உள்ள Sliderஐ நகர்த்தியும் இதே செயலை செய்யலாம். அவ்வாறு Sliderஐ நகர்த்தினால் Counter Stepsலும் அந்த எண் மாறும்.



Counter Stepsல் எண்களை பூர்த்தி செய்து துல்லியமாக சேய்யலாம். ஆனால் துடுப்பு மூலம் குத்து மதிப்பாக செய்யலாம்.

18 Duplicates (lines)

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

துடுப்பின் நடுவில் உள்ள Sliderஐ இவ்வாறு நகர்த்தி Duplicateகளை குறைக்கலாம்.





மவுஸால் சதுர கட்டத்தை உட்பக்கமாக Drag செய்து இவ்வாறு மாற்றலாம்.



மவுஸால் சதுர கட்டத்தை வெளி பக்கமாக Drag செய்து இவ்வாறு மாற்றலாம்.

**Contour Offset:**

இதை செலக்ட் செய்து கீழே உள்ளவாறு Duplicateகளுக்கு நடுவில் உள்ள இடைவெளியை கூட்டலாம்/குறைக்கலாம். அல்லது துடுப்பின் நடுவில் உள்ள Sliderஐ நகர்த்தியும் இதே செயலை செய்யலாம். அவ்வாறு Sliderஐ நகர்த்தினால் Counter Offsetலும் அந்த எண் மாறும்.



0.401”

இப்பொழுது ஒரு Contour Effectஐ உருவாக்குவோம்.

ஒரு Objectஐ வரைந்து தேவையான நிறத்தை Fill செய்யவும் (வட்டம் அல்லது செவ்வகம்)

அடுத்து இந்த Interactive contour Toolஐ செலக்ட் செய்யவும்.



Step 1

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




Step 2

அடுத்து Property Barல் Presetsல் உள்ள Pull Downஐ கிளிக் செய்து Center1 என்பதை செலக்ட் செய்யவும் உடனே செவ்வகம் கீழ்கண்டவாறு மாறுவதை பார்க்கலாம்.



After Change

கட்டத்தின் மீது கிளிக் செய்தால் நடுவில் Fountain Fill Mid Point என ஒரு துடுப்பு தோன்றும். அதை Adjuist செய்து மாற்றங்களை செய்யலாம்.




**குறிப்பு:** Property Bar மூலம் செய்யக்கூடிய எல்லா செயல்களையும் இந்த துடுப்பு மூலமும் செய்யலாம்.

Presetல் Outside1 என்பதை செய்தால் கீழ்கண்ட்வாறு தோன்றும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 2) **Interactive Distortion Tool:**



ஒரு கட்டம் அல்லது வடடத்தை வரைந்து அதில் இருந்து விருப்பம் போல புதிய வடிவங்களை உருவாக்கலாம். ஆங்காங்கே மாற்றியும் அமைக்கலாம்.

Property Bar




1. Preset List
2. Add Preset
3. Delete Preset
4. Push and Pull Distortion
5. Zipper Distortion
6. Twister Distortion
7. Add New Distortion
8. Push and Pull Distortion Amplitude
9. Center Distortion
10. Convert to Curves
11. Copy Distortion Properties
12. Clear Distortion

### Preset List:

ஏற்கனவே Readymade ஆக அநேக Designகள் உள்ளன. இவற்றை Apply செய்து புதிய வடிவங்களை உருவாக்கலாம்.

இவ்வாறு புதிய Designகளை உருவாக்கிய பிறகு அவற்றிலும் மாற்றங்கள் செய்து புதிய Designஐ உருவாக்கலாம். முதலில் ஒரு கட்டம் அல்லது வட்டம் வரையவும். அடுத்து இந்த Toolஐ செலக்ட் செய்து Presetல் உள்ள Designகளை செலக்ட் செய்யவும். உடனே அந்த Designற்கு மாறிவிடும்.










மேலே உள்ள செவ்வகம் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளது










இவைகள் Preset மூலம் முதலில் உள்ள கட்டத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட Designகள்

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Push and Pull Distortion:

ஒரு கட்டத்தில் Distortionஐ Apply செய்து புதிய வடிவம் உருவாகிறது. திரும்பவும் அதை உட்பக்கமாகவோ அல்லது வெளிப்பக்கமாகவே இழுத்து புதிய வடிவத்தை உருவாக்கலாம்.







## Zipper Distortion:



இதன் மூலம் அனேக கூர்மையான முனைகளுடன் உள்ள ஒரு வடிவத்தை அமைக்கலாம். அதாவது நான்கு முனைகள் உள்ள ஒரு கட்டத்ததை அனேக கூர்மையான முனைகளுடன் உருவாக்கலாம்.

ஒரு கட்டத்தை வரையவும். இந்த Toolஐ செலக்ட் செய்து கட்டத்தில் தோன்றும் ஒரு புள்ளியில் மவுசை வைத்து Drag செய்யவும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Twister Distortion:



கட்டம் அல்லது வட்டம் வரையவும். அடுத்து இந்த Toolஐ செலக்ட் செய்துவிட்டு Property Barல் இந்த Optionஐ செலக்ட் செய்ய வேண்டும். அடுத்து புள்ளியில் மவுசை வைத்து சுழற்றவும்




## Convert to Curves: [Ctrl + Q]




ஒரு கட்டத்தை வரைந்து Distortionஐ Apply செய்யவும். அடுத்து Property Barல் இந்த Optionஐ கிளிக் செய்து Objectல் உள்ள புள்ளியில் மவுசை வைத்து Drag செய்தால் புதிய வடிவம் உருவாகும்.




## Center Distortion:




மேலே செய்து முடித்த உருவத்தை செலக்ட் செய்து Property Barல் இந்த Optionஐ கிளிக் செய்தவுடன், நான்கு புறமும் ஒரே மாதிரியாக மாறிவிடும்.



மேலே உள்ள Final என்ற உருவத்தில் Center Distortion என்பதை Apply செய்த பிறகு இவ்வாறு மாறிவிடும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Interactive Envelop Tool:



தலைப்பு எழுத்துக்கள் அல்லது ஒரு வட்டம் போன்ற Objectஐ நமது விருப்பப்படி ஒரு புதிய Shapeற்கு மாற்றிவிடலாம். இதை கிளிக் செய்த உடன் மவுஸ் பாயிண்டர் இந்த Toolன் தோற்றத்திற்கு மாறிவிடும். முதலில் ஒரு பெயரை அடிக்கவும். அடுத்து இந்த Toolஐ கிளிக் செய்து விட்டு எழுத்துக்களை கிளிக் செய்யவும். உடனே பெயரை சுற்றி 6 Nodeகள் உருவாகும்.

Presets என்ற இடத்தில் 6 டிசைன்கள் உள்ளன. Presetsல் ஒன்றை கிளிக் செய்த உடன் அதற்குரிய Shapeல் எழுத்துக்கள் மாறுவதை காணலாம். இவ்வாறு Preset மூலம் ஆறு விதமான Shapeகளை உருவாக்கலாம்.




Property Bar







Step 1




Step 2



Preset List ல் உள்ள சில டிசைன்கள் மூலம் மாற்றப்பட்ட Shapeகள்

இவைகள் தவிர நமது விருப்பப்படி Shapeகளை மாற்றலாம். சுலபமாக Shapeஐ மாற்ற முதலில் ஒரு ஓவல் வட்டத்தை வரைந்து அதற்கு தகுந்தாற்போல மாற்றலாம். அல்லது Polygon மூலம் கட்டம் வரைந்து மாற்றலாம். இதனால் Nodeகளை இழுத்து Shapeஐ உருவாக்க வசதியாக இருக்கும்.



இவைகள் தவிர Property Barல் மேலும் 4 டிசைன்கள் உள்ளன. அவற்றில் ஒன்றை கிளிக் செய்து Nodeஐ நகர்த்தி புதிய Shapeஐ உருவாக்கலாம்.

1) Envelope Straight Line Mode
2) Envelope Single Arc Mode
3) Envelope Double Arc Mode
4) Envelope Unconstrained Mode




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

### Envelope Straight Line Mode:

நடுவில் உள்ள Nodeஐ இழுத்து நேர்க்கோடாக தோன்றச் செய்யலாம். Proprty Barல் Envelope Straight Line Mode என்பதை செலக்ட செய்து கீழ்கண்டவாறு செய்யலாம்.




Step 1




Step 2




Step 3




Step 4 & Final

### Envelope Single Arc Mode:

இதன் மூலம் கீழ்க்கண்டவாறு தோன்றச் செய்யலாம். அதாவது ஒரே ஒரு வளைவுடன் உருவாக்கலாம்.




### Envelope Double Arc Mode:

இதன் மூலம் இரண்டு வளைவுகளை உருவாக்கலாம்.




### Envelope Unconstrained Mode:

இதன் மூலம் எழுத்துக்களின் தோற்றத்தை நமது விருப்பப்படி எல்லா திசைகளிலும் வளைத்து Shapeஐ மாற்றலாம். இதனை பயன்படுத்தும் பொழுது ஒரு Nodeஐ கிளிக் செய்த உடன் Nodeன் இரண்டு புறமும் Handle தோன்றும். அதன் மூலம் Shapeஐ மாற்றி அமைக்கலாம்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 5) **Interactive Extrude Tool:**

Objectகளை பின்பக்கம் இழுத்து நீண்ட நிழல் போல தோன்றச் செய்யலாம்.

• எழுத்துகளுக்கு பின்னால் 3D Shape போல கொண்டு வரலாம்.



இதன் Property Barல் உள்ள Presetல் 6 விதமான டிசைன்கள் Readymade ஆக உள்ளன. அவைகளை பயன்படுத்தலாம். அது தவிர Property Barல் Extrudes Type என்பதில் அநேக Optionகள் உள்ளன. அவற்றையும் பயன்படுத்தலாம்.

Property Bar







Extrude type

முதலில் ஒரு எழுத்தை அடிக்கவும். எழுத்தை பெரியதாக மாற்றவும்.

அடுத்து இந்த Toolஐ செலக்ட் செய்து Property Barல் உள்ள Presetsல் மூன்றாாவதாக உள்ள Vector Extrude3 என்பதை கிளிக் செய்யவும்



உடனே அருகில் உள்ளவாறு தோன்றும்.



Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

அடுத்து Property Barல் Colour என்பதை கிளிக் செய்யவும். Use Colour Shading என்பதை கிளிக் செய்யவும்.






இங்கு From, To இடங்களில் தேவையான Colourஐ பூர்த்தி செய்யவும்.

To என்ற இடத்தில் தோன்றும் கலர் எழுத்தின் முன்பகுதியில் தோன்றும்.
From என்ற இடத்தில் தோன்றும் கலர் பக்கவாட்டில் தோன்றும்.




அடுத்து Extrusion Type என்ற இடத்தில் உள்ள ஆறு Optionகளை ஒவ்வொன்றாக Click செய்து மாற்றங்களை கவணிக்கவும்.



Extrusion Type





Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

அடுத்து Bevelsஐ கிளிக் செய்யவும்.

Use Bevel என்ற Check Boxல் டிக் அடிக்கவும்.






Show Bevel only என்ற Check Boxல் டிக் அடிக்கவும்.
இப்பொழுது கீழ்க்கண்டவாறு எழுத்து முன்பக்கம் மட்டும் தோன்றும்.



அடுத்து Light Effectஐ பார்க்கலாம்

Property Barல் உள்ள Lightingஐ கிளிக் செய்யவும்.

உடனே அருகில் உள்ள விண்டோ தோன்றும்.




இங்கு 1 2 3 என்பதை மாறி மாறி கிளிக் செய்து மாற்றத்தை பார்க்கலாம்.



இரண்டுவிதமான Light Effectகள்

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.



இங்கு தோன்றும் துடுப்பின் நடுப்பகுதியில் உள்ள Slideஐ நகர்த்தி Extrusion அளவை கூட்டலாம் / குறைக்கலாம்.

இதே செயலை Property Barல் உள்ள Depthல் எண்களை கூட்டியோ குறைத்தோ செய்யலாம்.

**துடுப்பு பற்றி தகவல்**




**குறிப்பு:** மவுஸ் பாயிண்டர் + போல மாறும். அதன் பிறகுதான் Adjust செய்ய முடியும்.




துடுப்பின் மூலம் செய்யப்பட்ட மாற்றங்கள்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Interactive Drop Shadow Tool:



Shadow என்றால் நிழல். எழுத்துக்களுக்கு அல்லது வட்டம் போன்ற Objectகளுக்கு நிழலை தோன்றச் செய்கிறது.

தோன்றும் நிழலில் கீழ்க்கண்ட மாற்றங்களை செய்யலாம்.

1) தேவையான கோணத்தில் தோன்றச் செய்யலாம்
2) நிழலின் நிறத்தை மாற்றலாம்
3) நிழலின் திசையை மாற்றலாம்
4) நிழல் ஆரம்பிக்கும் இடத்தை மாற்றலாம்
5) நிழலை Dark ஆகவோ Light ஆகவோ தோன்றச் செய்யலாம்.

நிழலை தேவைப்படும் விதத்தில் தோன்றச் செய்ய Property Barல் உள்ள Preset என்ற இடத்தில் Optionகள் உள்ளன. அவற்றை செயல்படுத்தலாம்.

Property Barல் உள்ள Preset Listல் அநேக டிசைன்கள் readymadeஆக உள்ளன.




இந்த Preset Listல் ஏதாவது ஒன்றை கிளிக் செய்த உடன் இவ்வாறு தோன்றும். Preset Listல் தோற்றத்தையும் பார்த்து செலக்ட் செய்யலாம்.

Property Barல் உள்ள Optionகள் மூலம் செய்யப்படும் மாற்றங்களை துடுப்பு மூலமும் செயல்படுத்தலாம்.

முதலில் ஒரு வட்டம் வரையவும்.



அடுத்து இந்த Toolஐ Select செய்யவும்.




வட்டத்தின் மேல் பகுதியில் ஒரு Node தோன்றும். அடுத்து Presetsல் Flat Bottom Left என்பதை கிளிக் செய்யவும்.

உடனே அடுத்த பக்கத்தில் உள்ளவாறு ஒரு துடுப்பு வட்டத்தில் தோன்றும்.


Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.






அடுத்து Property Barல் Drop down features Direction என்பதை கிளிக் செய்து Outside என்பதை கிளிக் செய்யவும். உடனே கீழ்க்கண்டவாறு படம் நிழலுடன் தோன்றும்.



திரும்பவும் இந்த நிழலில் அனேக மாற்றங்களை ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு செய்யலாம். இதன் நடுவில் உள்ள துடுப்பு மூலமாகவும் செய்யலாம் அல்லது Property Barல் உள்ள Optionகள் மூலமும் செய்யலாம்.

Property Barல் உள்ள Optionகள் மூலம் செய்யப்படும் மாற்றங்களை இந்த துடுப்பு மூலமும் செயல்படுத்தலாம்.



இந்த துடுப்பு மூலம் நிழலில் மாற்றங்கள் செய்யப்பட்ட சில உருவங்கள்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

Proprty Barல் உள்ள Preset மூலமாக உருவாக்கப்பட்ட சில நிழல்கள்.



Presetல் ஒவ்வொன்றாக Select செய்து பார்க்கவும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**துடுப்ப பற்றி ஒரு தகவல்**




இதை நமது விருப்பப்படி நகர்த்தலாம். அதற்கு தகுந்தாற் போல நிழலின் தோற்றத்தில் மாற்றம் ஏற்படும்.






Sliderஐ உட்பக்கமாக நகர்த்தினால் நிழல் Lightஆக மாறும்



Sliderஐ வெளிப்பக்கமாக Arrow பக்கம் (முக்கோணம்) நகர்த்தினால் நிழல் Darkஆக மாறும்

Property Bar




**Property Barல் உள்ள சில Optionகளின் பயன்பாடு**

**1) Preset List** - நிழலின் வகைகள்
**2) Add Preset -** நாம் புதியதாக தயாரித்த டிசைனை சேர்க்கலாம்
**3) Delete Preset -** தேவை இல்லாதவைகளை Delete செய்யலாம்.
**4) Drop Shadow Offset -** நிழலை சரியாக தோன்றச் செய்யலாம்.
**5) Drop Shadow Angle -** நிழலின் திசையை திருப்பலாம்.
**6) Drop Shadow Opacity** - கண்ணாடித் தன்மையை கூட்ட/குறைக்க
**7) Drop Shadow Featuring -** நிழலின் அகலத்தை கூட்ட/குறைக்க
**8) Drop Shadow Featuring Direction -** நிழலின் திசையை மாற்ற
**9) Drop Shadow Featuring Edges -** நிழலின் தோற்றத்தை மாற்ற
**10) Drop Shadow Colour -** நிழலின் கலரை மாற்ற
**11) Clear Drop Shadow -** நிழலை Delete செய்ய.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 7) **Interactive Transparency Tool:**

Transperancy என்றால் கண்ணாடித்தன்மை.



இந்த Toolஐ தனியாக பயன்படுத்த இயலாது. ஏற்கனவே இருக்கின்ற ஒரு Objectல் பயன்படுத்த வேண்டும். நிறங்களில் Transperancy Effectஐ பயன்படுத்த இது முக்கியமாக உதவுகிறது. இதன் மூலம் புதிய டிசைன்களை உருவாக்கலாம்.

Corel Drawவில் நிறங்களை கையாள்வதற்காக தனியாக Fill Tool என கொடுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் 7 விதமான Toolகள் உள்ளன. அந்த 7 Toolகள் மூலம் செய்யக் கூடிய எல்லாவிதமான செயல்களையும் இந்த ஒரே Tool மூலமாக செய்துவிடலாம். ஆனால் அந்த Toolகள் மூலம் Fill செய்யப்படும் நிறங்களில் Transperancy Effect இருக்காது.

அந்த Toolகள் அனைத்தும் Property Barல் உள்ள Transparancy Type என்பதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் தேவைப்பட்டால் மாற்றங்களையும் செய்யலாம். இதற்கான Optionகள் Porperty Barல் உள்ளன. மேலும் இந்த Toolஐ பயன்படுத்தும் பொழுது ஒரு துடுப்பு தோன்றும். அந்த துடுப்பு மூலமாகவும் மாற்றங்களை செய்யலாம்.

Property Bar




1. Edit Transparency
2. Transparency Type
3. Transparency Operation
4. Transparency Mid Point
5. Fountain Transparency Angle and Edge Pad
6. Apply Transparency to the Fill. Outline or Both
7. Freeze
8. Copy Transparency Properties
9. Clear Transparency

### Edit Transparancy Type:

இது Property Barல் முதலாவதாக உள்ள ஒரு ஐகான். Property Barல் இரண்டாவதாக உள்ள Transparancy Type என்ற இடத்தில் Select செய்யப்படுகிற அயிட்டத்திற்கு தகுந்தாவாறு இது செயல்படும்.

உதாரணத்திற்கு Transparancy Type என்ற இடத்தில் None என்பதை Select செயதால் இந்த ஐகான் Disable ஆகிவிடும்.
அந்த None தவிற மற்ற 9 அயிட்டங்களில் எதை தேர்வு செய்தாலும் இந்த ஐகான் Enable ஆகிவிடும்.

உதாரணத்திற்கு Uniform என்பதை Select செய்து இந்த ஐகானை Click செய்தால் அதற்குறிய விண்டோ (Dialog Box) தோன்றும்.

அதேபோல Linear என்பதை Select செய்தால் அதற்குரிய விண்டோ (Dialog Box) தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Transparency Type:




இதில் அநேக Typeகள் உள்ளன.

அநேக Typeகள் உள்ள Pull Dowஐ கிளிக் செய்து தேவையானதை Select செய்தால் மாறுவதை காணலாம். முதலில் ஒரு தடவை Drag செய்து உருவாக்கவும். அடுத்து செலக்ட் செய்தாலே மாற்றத்தை காணலாம்.

இதில் காணப்படும் அயிட்டங்களின் விவரங்கள் பின் வறுமாறு.

**None -** No Color
**Uniform -** முழுவதும் ஒரே மாதரியான நிறத்தை நிறப்பலாம்.

**Linear**
**radial**
**Conical**
**Square**

இவைகள் Fountain Fill Dialog (Fill Color) மூலம் செய்யக்கூடிய செயல்களை செய்ய பயன்படுத்தலாம்.

**Two Color Pattern**
**Full Color Pattern**
**Bitmap Pattern**

Fill color உள்ள Pattern Fill Dialog Tool மூலமாக செய்யக்கூடிய செயல்களை செய்ய பயன்படுகின்றன.

**Texture -** Fill colorல் உள்ள Texture Fill Dialog Tool மூலம் செய்யக்கூடிய செயல்களை செய்ய பயன்படுகிறது.

முதலில் ஒரு கட்டம் அல்லது வட்டம் வரையவும். அடுத்து இந்த Toolஐ செலக்ட் செய்து ஒரு பக்கத்தின் முனையில் இருந்து மறு முனைக்கு Drag செய்யவும். இந்த Toolஐ செலக்ட் செய்தவுடன் மவுஸ் பாயிண்டருடன் இந்த Toolன் குறியும் (Symbol) தோன்றும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.



Linear



Radial Type



Conical Type



Square



Full Color Pattern

## Transparency Operation:




இது Transparency Type உடன் சேர்ந்து செய்யப்படும். முதலில் Transparency Typeல் ஏதாவது ஒரு டிசைனை Select செய்து ஒரு Transparency Effectஐ உருவாக்கவும். இதில் அநேக Optionகள் உள்ளன. முதலில் இங்கு Defaultஆக Normal தோன்றும். இங்கு Optionகளை ஒவ்வொன்றாக Select செய்து மாற்றங்களை பார்க்கலாம். புதிய புதிய டிசைன்கள் தோன்றுவதை காணலாம்.



If Darker

If Darker செலக்ட் செய்யப்பட்டுள்ளது.



Difference

Difference செலக்ட் செய்யப்பட்டுள்ளது.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

### Transparency MidPoint:

இங்கு உள்ள நம்பரை மாற்றலாம் அல்லது நடுவில் உள்ள ஒரு Sliderஐ நகர்த்தலாம். உடனே நிறம் மாறுவதை காணலாம். துடுப்பினை பயன்படுத்தாமல் மாற்றங்களை செய்யலாம். இங்கு எண்களை பூர்த்தி செய்து துல்லியமாக செய்யலாம். ஆனால் துடுப்பு மூலம் குத்து மதிப்பாக செய்யலாம்.




நகர்த்தக்கூடிய Slider

### Fountain Transparency Angle and Edge Pad:




துடுப்பில் கை வைக்காமல் இங்கு உள்ள எண்களை மாற்றி திசையை திருப்பலாம். இதே செயலை துடுப்பு மூலமும் குத்து மதிப்பாக செய்யலாம்.

### Apply Transparency to the Fill, Outline or Both:

ஒரு Objectன் Outline நிறத்தை மட்டும் மாற்றலாம். உட்புறமும் நிறத்தை மாற்றலாம். மொத்தமாக எல்லாவற்றிலும் நிறத்தை மாற்றலாம்.

இதில் 3 Optionகள் உள்ளன.




**Fill** - Border தனியாக தெரியும்.

**Outline** - பூராவும் ஒரே கலராக மாறும்.

**All** - சாதாரணமாக தெரியும்

### Freeze:

Freeze என்றால் Lock செய்தல் என்று பொருள். செய்த மாற்றங்களில் திரும்பவும் தவறுதலாக மாற்றங்கள் செய்யாதவாறு செய்யலாம்.

**VIDEO EDITING (தமிழ்)**

Professional Camera, Handycamகளில் எடுக்கப்படும் வீடியோக்களை Edit செய்து திருமண நிகழ்ச்சிகளின் வீடியோ போலவே நல்ல வீடியோக்களை மிகவும் சுலபமாக நீங்களே தயாரிக்கலாம்.

★ Video Capturing,
★ Fireware Card
★ Pinnacle Capture card
★ Video Editing
★ Titling
★ Transperancy,
★ Transitions
★ Hollywood Effects
★ Exporting
★ CD, DVD Writing

**3 DVDகள் இலவசம்**

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## **Eye Dropper Tool** (2 Tools)

மொத்தம் இதில் 2 Toolகள் உள்ளன.

1) Eye Dropper Tool
2) Paint Bucket Tool



இவை இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்து செயல்படும். ஒரு படத்தில் உள்ள நிறத்தை வேறு ஒரு படத்தில் நிறப்ப இந்த Toolகள் பயன்படுகின்றன.

### 1) **Eye Dropper Tool:**

ஒரு படத்தில் உள்ள நிறத்தை வேறு ஒரு படத்தில் நிறப்ப முதலில் இந்த Toolஐ செலக்ட் செய்து அந்த நிறத்தின் மீது Click செய்ய வேண்டும்.

### 2) **Paint Bucket Tool:**

Eye Dropper Toolஆல் Click செய்த பிறகு அந்த கலரை நிறப்ப வேண்டிய இடத்தில் Paint Bucket Toolஆல் Drag செய்ய வேண்டும். உடனே அந்த கலர் நிறப்பப்பட்டுவிடும்.

அதாவது ஒரு நிறத்தை Eye Dropper Tooஆல் உருஞ்சி Paint Bucket Toolஆல் நிறப்புகிறோம்.

முதலில் இரண்டு Objectகளை வரையவும். ஒரு Objectல் ஒரு நிறத்தை Fill செய்யவும். இதற்கு Objectஐ செலக்ட் செய்து வலது பக்க ஓரத்தில் உள்ள ஒரு கலரை கிளிக் செய்தால் Fill ஆகிவிடும்.

அடுத்து Eye Dropper Toolஆல் முதல் Objectல் உள்ள Color மீது கிளிக் செய்யவும். பிறகு Paint Bucket Toolஆல் இரண்டாவது Objectல் Drag செய்யவும். இப்பொழுது முதல் Objectல் உள்ள நிறம் இரண்டாவது Objectலும் Fill செய்யப்பட்டுவிடும்.



Step 1



Step 2



Final

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## **Outline Tool** (11 Tools)



Outlineகளை கையாள்வதற்காகவே இந்த Tool கொடுக்கப்பட்டுள்ளது.
சாதாரணமாக ஒரு நிறத்தை Fill செய்வதற்கு முன்பாக ஒரு கட்டம் அல்லது வட்டம் வரைந்து பிறகு நிறத்தை Fill செய்ய வேண்டும். அவ்வாறு நிறத்தை Fill செய்த பிறகு வரைந்த Outlineஐ Delete செய்து விடலாம்.

சாதாரணமாக அடிக்கப்படும் எழுத்துக்களுக்கு Outline இருக்காது. இந்த Tool மூலம் எழுத்துக்களுக்கு Outlineஐ உருவாக்கலாம். Outlineஐ மட்டும் வைத்துவிட்டு Fill செய்யப்பட்டுள்ள நிறத்தை நீக்கிவிடலாம்.

Outlineஐ Thickஆக மாற்றலாம். நிறத்தையும் மாற்றலாம்.
மேலும் வரையப்பட்ட கோடுகளுக்கு முன்பும் பின்பும் Arrowக்களை சேர்க்கலாம்.
வரைந்த கோடுகள், Outline போன்றவற்றில் உள்ள கோடுகளை புள்ளிகளாக மாற்றலாம்.

மொத்தத்தில் Outlineகளில் செய்யக்கூடிய அனைத்து வேலைகளையும் சுலபமாக செய்யலாம்.

இதில் மொத்தம் 11 Toolகள் உள்ளன.

1) Outline Pen Dialog
2) Outline Colour Dialog
3) No Outline
4) Hairline Outline
5) Halfpoint Outline
6) 1 Point Outline
7) 2 Point Outline
8) 8 Point Outline
9) 16 Point Outline
10) 24 Point Outline
11) Colour Docker Window

Property Bar




3 முதல் 10 வரை உள்ள அயிட்டங்களை Property Barல் இருந்தும் செயல்படுத்தலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

1) **Outline Pen Dialog:** கோடுகள் வரைந்து Arrowக்களை சேர்க்கலாம்.

2) **Outline Colour Dialog:** படத்திற்கு தேவையான கலரை நிறப்பலாம்.

3) **No Outline:** ஏற்கனவே வரையப்பட்ட Outlineஐ Hide/Delete செய்யலாம்.

4) **Hairline Outline:** Outlineஐ மிகவும் மெல்லியதாக மாற்றலாம்.

5) **½ Point Outline:** Outlineஐ Half Point அளவிற்கு மாற்றலாம்.

6) **1Point Outline:** Outlineஐ 1 Point அளவிற்கு மாற்றலாம்.

7) **2 Point Outline:** Outlineஐ 2 Point அளவிற்கு மாற்றலாம்.

8) **8 Point Outline:** Outlineஐ 8 Point அளவிற்கு மாற்றலாம்.

9) **16 Point Outline:** 16 Point அளவிற்கு மாற்றலாம்.

10) **24 Point Outline:** Outlineஐ 24 Point அளவிற்கு மாற்றலாம்.

11) **Colour Docker Window:** படங்களில் உள்ளOutlineற்கு கலர் கொடுக்கலாம். மேலும் உட்புறமும் கலரை நிறப்பலாம்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 1) Outline Pen Dialog:

இதன் மூலம் Outline மற்றும் கோடுகளில் கீழ்க்கண்ட செயல்களை செய்யலாம்.

1) Outline கோடுகளின் Thickness

2) Outline கோடுகளின் நிறம்

3) Outline கோடுகளின் Style

4) கோடுகளின் இரு முனைகளலும் Arrowக்களை சேர்க்கலாம்.

5) திசையை மாற்றி அமைக்கலாம்.

முதலில் ஒரு கட்டம் வரையவும். அடுத்து இந்த Toolஜ கிளிக் செய்யவும். உடனே கீழ்க்கண்ட விண்டோ (Dialog Box) தோன்றும். மேலே கூறப்பட்ட செயல்களை இந்த விண்டோ மூலம் செய்யலாம்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

கீழே பல அளவுகளில் Outlineகள் உள்ள கட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.









Cornerகள் வளைவாக உள்ள கட்டங்கள்




16 Pointல் கோடுகளின் Line Capsஐ இவ்வாறு மாற்றலாம்.




8 Pointல் கோடுகளின் Styleஐ இவ்வாறு மாற்றலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 2) Outline Colour Dialog:

பார்டர்களுக்கு கலரை உருவாக்கலாம். முதலில் ஒரு கட்டம் வரையவும். அடுத்து இந்த Toolஐ கிளிக் செய்யவும். உடனே இந்த விண்டோ (Dialog Box) தோன்றும்.




Model என்ற இடத்தில் தேவையானதை செலக்ட் செய்யவும்.

அடுத்து சதுரமாக உள்ள பெரிய கட்டத்தில் தேவையான இடத்தில் கிளிக் செய்தால் ஒரு சிறிய செவ்வகம் தோன்றும்.

Sliderஐ நகர்த்தினால் பெரிய கட்டத்தில் நிறம் மாறுவதை காணலாம்.

New என்ற இடத்தில் புதிய நிறம் தோன்றும். அடுத்து OKஐ கிளிக் செய்யவும்.

உடனே கட்டம் அந்த நிறத்திற்கு மாறிவிடும்.



கருப்பு நிற பார்டர்



பார்டர் சிவப்பு நிறத்திற்கு மாற்றப்பட்ட பிறகு

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 11) Colour Docker Window:

இந்த Tool மூலம் ஒரு கட்டத்தில் Frame (Outline) மற்றும் உட்புறம் ஆகியவைகளுக்கு தனித்தனி கலர்களை நிரப்ப முடியும். முதலில் ஒரு கட்டத்தை வரையவும்.



முதலில் இவ்வாறு ஒரு கட்டம் வரையவும்.

அடுத்து இந்த Toolஐ கிளிக் செய்யவும். உடனே கீழ்க்கண்டவற்றில் ஏதாவது ஒரு விண்டோ தோன்றும்.

***Colour Docker Window***




RGB Model

CMYK Model

உட்புறம் Fill செய்ய

பார்டர் கலரை மாற்ற

Sliderஐ நகர்த்தி தேவையான கலரை பெரிய கட்டத்தில் உருவாக்கவும்.

அடுத்து பெரிய கட்டத்தில் தேவையான இடத்தில் கிளிக் செய்யவும். அங்கு ஒரு சிறிய கட்டம் தோன்றும்.

கீழே Fill, Outline என இரண்டு பட்டன்கள் உள்ளன.

Fill என்பதை கிளிக் செய்தால் கட்டம் பூராவும் Fill ஆகிவிடும்.

Outline என்பதை கிளிக் செய்தால் Frame மட்டும் அந்த Colourல் தோன்றும்.

இரண்டையும் தனித்தனி Colourகளில் பூர்த்தி செய்யலாம். அதாவது Border தனி கலர். உட்பக்கம் தனி கலர்.



உட்புறம் மற்றும் பார்டர் தனித்தனி நிறங்களில்

**குறிப்பு:** மேலே இரண்டு விண்டோக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் ஒரே ஒரு விண்டோ மட்டுமே தோன்றும். அனேக மாடல்கள் உள்ளன. இங்கு RGB, CMYK ஆகிய இரண்டு மாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. RGB என்ற இடத்தில் உள்ள Pull Downஐ Click செய்து தேவையான மாடலை செலக்ட் செய்து பயன் படுத்தலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




**Colour Docker Window**




மேலும் கலர்களை
தேர்வு செய்ய




**Models**

GK



உட்புறம் மற்றும் பார்டர்
தனித்தனி நிறங்களில்



பார்டர் சிவப்பு நிறம்
உட்பக்கம் பச்சை நிறம்




GK

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Fill Tool:** (7 Tools)

Corel Drawவில் Objectகளுக்கு நிறங்களை Fill செய்ய இந்த Tool பயன்படுகிறது. இதில் மொத்தம் 7 வகையான Toolகள் உள்ளன.




1) Fill Colour Dialog
2) Fountain Fill Dialog
3) Pattern Fill Dialog
4) Texture Fill Dialog
5) Post Script Fill Dialog
6) No Fill
7) Colour Docker Window

இந்த Toolகளை பயன்படுத்தி கீழ்கண்ட செயல்களை செய்யலாம்.

1) ஒரே மாதிரியான நிறத்தை செய்யலாம்.
2) Linear, Radial, Conical, Square டிசைன்களில் இரண்டு நிறங்களை Fill செய்யலாம்.
3) Readymade ஆக உள்ள Patternகளை Fill செய்யலாம்.
4) Texture எனப்படும் Readymade ஆக உள்ள டிசைன்களை Fill செய்யலாம்.
5) Post scriptல் உள்ள Readymade டிசைன்களை Fill செய்யலாம்.
6) ஏற்கனவே நிறம் Fill செய்யப்பட்டிருந்தால் அதை Delete செய்துவிடலாம்.

மேற்படி செயல்களை செய்ய தனித்தனி Toolகள் உள்ளன.

**No Fill:** இந்த Tool ஏற்கனவே Fill செய்யப்பட்ட நிறங்களை அகற்ற உதவுகிறது. மற்ற Toolகள் அனைத்தும் கலர்களை படங்களில் Fill செய்ய உதவுகின்றன.

**குறிப்பு:** மேலே கூறப்பட்ட ஒவ்வொரு Toolற்கும் தனித்தனியாக Dialog Boxகள் உள்ளன. ஒரு Toolஐ கிளிக் செய்த உடன் அதற்குரிய Dialog Box தோன்றும். அந்த Dialog Boxஐ பயன்படுத்திதான் தேவையான மாற்றங்களை செய்ய முடியும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 1) Fill Colour Dialog :

விரும்பிய ஒரே மாதிரியான ஒரே நிறத்தை ஒரு Objectல் Fill செய்ய இது உதவுகிறது. முதலில் ஒரு கட்டம் வரையவும். அடுத்து Fill Colour Dialog Toolஐ கிளிக் செய்யவும். உடனே கீழ்க்கண்ட விண்டோ (Dialog Box) தோன்றும்.




பெரிய கட்டத்தில் விரும்பிய இடத்தில் கிளிக் செய்து OKஐ கிளிக் செய்த உடன் கட்டத்தில் அந்த நிறம் Fill ஆகிவிடும். Sliderஐ Drag செய்து மேலும் புதிய நிறங்களை உருவாக்கலாம்.

மேலே Model என்பதில் தேவையானதை செலக்ட் செய்து பயன்படுத்தலாம்.






***Fill செய்த பின்பு***

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 2) Fountain Fill Dialog :

இரண்டு நிறங்களை Fill செய்யலாம். அதாவது இரண்டையும் Mix செய்யாமல் ஒரு நிறத்தில் ஆரம்பித்து வேறு நிறத்தில் முடியும்படிச் செய்யலாம். Linear, Radial, Conical, Square என நான்கு Typeகள் உள்ளன. இரண்டு நிறங்களும் தோன்றும்.

முதலில் ஒரு கட்டம் வரையவும். அடுத்து இந்த Fountain Fill Dialog Toolஐ கிளிக் செய்யவும். உடனே கீழ்க்கண்ட விண்டோ (Dialog Box) தோன்றும்.




இங்கு From, To ஆகிய இரண்டிலும் Color Palette தோன்றும். விரும்பிய கலரை தேர்வு செய்யலாம்.

From என்ற இடத்தில் செலக்ட் செய்யப்படும் கலர் முதலில் தோன்றி To என்ற இடத்தில் செலக்ட் செய்யப்பட்ட கலரில் முடியும்.

Preview என்ற இடத்தில் உடனுக்குடன் மாற்றத்தை காணலாம்.

தேவையானதை செலக்ட் செய்து OKஐ கிளிக் செய்த பிறகு கட்டத்தில் புதிய நிறத்தை காணலாம்.

**Type:** இங்கு Linear, Radial, Conical, Square என நான்கு விதமான Typeகள் உள்ளன. தேவையானதை செலக்ட் செய்து பயன் படுத்தலாம.



Linear Radial Conical Square

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

### 3) Pattern Fill Dialog :




நிறங்களை Fill செய்வதற்கு பதிலாக Patternகளை Fill செய்யலாம். அநேக Patternகள் Readymade ஆக உள்ளன. அவைகளில் விருப்பமானதை ஒரு Objectல் Fill செய்யலாம். மேலும் Fill செய்யப்பட்ட Patternகளில் மாற்றங்களையும் செய்யலாம்.

முதலில் ஒரு கட்டம் வரையவும்.



அடுத்து இந்த Pattern FIll Dialog Toolஐ கிளிக் செய்யவும்.
உடனே கீழ்க்கண்ட விண்டோ (Dialog Box) தோன்றும்.




Fill செய்த பிறகு தோன்றும் காட்சி

செய்த இங்கு உள்ள Pull Downஐ Click செய்து தேவையான டிசைனை செலக்ட செயய வேண்டும். பிறகுOKஐ Click செய்யவும். அந்த டிசைன் கட்டத்தில் தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




இடது புறத்தில் 2 Color, Full Color, Bitmap என மூன்று Radio பட்டன்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் ஏராளமான டிசைன்கள் உள்ளன. அவற்றில் ஏதாவது ஒன்றை செலக்ட் செய்யவும்.

அதற்கு அடுத்து உள்ள கட்டத்தில் Pul Downஐ கிளிக் செய்து தேவையான டிசைனை செலக்ட் செய்யவும்.

அடுத்து Front, Back என இரண்டு Pul Down மெனுக்கள் உள்ளன. அவற்றில் தேவையான நிறத்தை செலக்ட் செய்யவும்.

அடுத்து OKஐ கிளிக் செய்யவும்.

இப்பொழுது செலக்ட் செய்யப்பட்ட டிசைன் கட்டத்தில் தோன்றும்.

Two Colour
டிசைன்கள்



Full Colour
டிசைன்கள்



Bit Map
டிசைன்கள்



Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 4) Texture Fill Dialog :

இந்த Tool மூலம் அநேக Designகளை பெறலாம். தேவையான Designகளை உடனுக்குடன் Preview மூலம் பார்த்து தேர்வு செய்யலாம்.

முதலில் ஒரு கட்டம் வரையவும். அடுத்து இந்த Texture Fill Dialog Toolஐ கிளிக் செய்யவும். உடனே கீழ்க்கண்ட விண்டோ (Dialog Box) தோன்றும்.




மேலே Texture Library என்ற இடத்தில் Sampleகள் உள்ளன. அவற்றில் ஒன்றை செலக்ட் செய்யவும்.

அடுத்து Texture List என்ற இடத்தில் ஒன்றை செலக்ட் செய்யவும். உடனே அதற்குரிய Designஐ கீழேயே Preview என்ற இடத்தில் பார்க்கலாம். Scroll பட்டனை நகர்த்தினால் வரிசையாக Designகளை பார்க்கலாம். தேவையான ஒன்றை செலக்ட் செய்து OKஐ கிளிக் செய்யவும்.

   

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 5) Post Script Fill Dialog :

இந்த Toolலும் ஏராளமான Designகள் உள்ளன.

ஒரு கட்டம் வரையவும். அடுத்து இந்த Post Script Fill Dialog Toolஐ கிளிக் செய்யவும். உடனே கீழ்க்கண்ட விண்டோ (Dialog Box) தோன்றும்.

முதலில் Preview Fill என்கிற Check Boxல் டிக் அடிக்கவும். Previewல் பார்த்து செலக்ட் செய்யவும்.




Down Arrow கீயை நகர்த்தினால் வரிசையாக Designகளை பார்க்கலாம். இங்கு தேவையான Designஐ செலக்ட் செய்து OKஐ கிளிக் செய்யவும்.






**6) No Fill:** இந்த Tool ஏற்கனவே Fill செய்யப்பட்ட நிறங்களை அகற்ற உதவுகிறது. நிறம் Fill செய்யப்பட்ட ஒரு Objectஐ Select செய்து இந்த Toolஐ Click செய்தால் போதுமானது. அதல் உள்ள நிறம் மறைந்து விடும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

### 7) Colour Docker Window:

இந்த Tool மூலம் ஒரு Objectல் அதாவது ஒரு கட்டத்தில் தேவையான கலரை நிரப்பலாம். Borderருக்கு தனியாக கலரை கொடுக்கலாம்.

Border கலர் வேறாகவும் உட்புறம் கலர் வேறாகவும் நிரப்பலாம்.

இதில் ஒரு சிறப்பு அம்சம் உள்ளது. நமது விருப்பப்படி புதிய கலரை உருவாக்கலாம். முதலில் ஒரு கட்டம் வரையவும். அடுத்து இந்த Color Docker Window Toolஐ கிளிக் செய்யவும். உடனே வலது மேல் பக்கத்தில் கீழ்க்கண்ட விண்டோவில் ஒன்று தோன்றும்.







இங்கு Sliderகளை நகர்த்தி நமக்கு விருப்பமான கலரை உருவாக்கலாம். RGBஐ செலக்ட் செய்தால் RGB என மூன்று Sliderகள் தோன்றும்.

CMYKஐ செலக்ட் செய்தால் CMYK என நான்கு Sliderகள் தோன்றும்.

கீழே Fill, Outline என இரண்டு பட்டன்கள் உள்ளன.

தேவையான கலரை செலக்ட் செய்த பிறகு Fill என்பதை கிளிக் செய்தால் கட்டம் பூராவும் (உட்புறம்) அந்த கலர் Fill ஆகிவிடும்.

Outline என்பதை கிளிக் செய்தால் பார்டர் மட்டும் அந்தக் கலரில் தோன்றும்.

ஒரே சமயத்தில் இரண்டையும் செயல்படுத்தலாம். அதாவது முதலில் ஒன்றை கிளிக் செய்த பிறகு அடுத்ததை அதாவது கலரை மாற்றிய பிறகு கிளிக் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தனித்தனி கலர்களை பார்க்கலாம். அவ்வாறு இல்லாமல் ஒரே தடவையில் இரண்டையும் கிளிக் செய்தால் எல்லாம் ஒரே கலரில் தோன்றும். Border தனியாக தெரியாது.



பார்டர் மட்டும் கலரில் உள்ளது. பார்டர் வேறு கலர் உட்புறம் வேறு கலர்

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Interactive Fill Tool:



இதில் மொத்தம் இரண்டு Toolகள் உள்ளன.

1) Interactive Fill Tool
2) Interactive Mesh Fill Tool

படங்களுக்கு விருப்பமான நிறங்களை Fill செய்ய இவைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு படத்தில் உள்ள நிறங்களை Copy செய்து வெறு படங்களிலும் Fill செய்யலாம்.

## 1) Interactive Fill Tool:



இங்கு Fill Toolல் உள்ள 7 Toolகள் மூலம் செய்யப்படுகிற செயல்களை இந்த ஒரேToolல் செய்துவிடலாம்.




**Fill Edit:** இதை கிளிக் செய்தால் Fill Typeல் செலக்ட் செய்யப்பட்டுள்ள அயிட்டத்திற்கான Dialog Box தோன்றும்.

## 1) Fill Type:

இங்கு Fill Type Option மூலம் ஒரு படத்தில் அநேகவிதமான நிறங்களை பூர்த்தி செய்யலாம். Pull Downஐ Click செய்தால் அநேக டிசைன்களை காணலாம். முதலில் உள்ள No Fill என்பது கலர் இல்லாமல் இருக்கும்பொழுது தோன்றும். அதே சமயம் Property Barல் மற்ற Optionகள் Disable நிலையில் இருக்கும்.

ஒரு படத்தில் ஏதாவது ஒரு கலரை நிரப்பிய பிறகுதான் Property Barல் உள்ள மற்ற Optionகள் Enable ஆக தோன்றும்.

ஒரு படத்தில் நிறத்தை அல்லது Designஐ Fill செய்த பிறகு மற்ற Optionகள் மூலம் மாற்றங்களை செய்யலாம்.

முதலில் ஒரு கட்டம் வரைந்து செலக்ட் செய்யவும். அடுத்து இந்த Toolஐ கிளிக் செய்யவும். இவ்பொழுது Property Barல் Fill Type என்ற Optionல் No Fill என தோன்றும். அங்குள்ள Pull Downஐ கிளிக் செய்து தேவையான டிசைனை கிளிக் செய்தால் கட்டத்தில் அந்த டிசைன் தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

Fill Typeல் உள்ள டிசைன்கள் மூலம் Fill செய்யப்பட்ட சில கட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.






Linear, Radial, Conical, Square இவை நான்கும் Fountain Fill வகையைச் சேர்ந்தவை. இவைகளை பயன்படுத்தும்பொழுது இரண்டு கலர்கள் தேவை. அதாவது ஆரம்ப கலர் முடிவு கலர்.

Fill Type என்ற இடத்தில் செலக்ட் செய்யப்படும் Designஐ பொருத்து Property Barல் Optionகள் மாறும். இங்கு Linear செலக்ட் செய்யப்பட்டுள்ளது.




**2) Fill Drop Down:**

Property Barல் உள்ள இதை Click செய்து தேவையான நிறத்தை Fill செய்யலாம்.

**3) Fill Drop Down:**

எனவே இரண்டு விதமான நிறங்களை கொண்டு வரலாம். அதாவது ஆரம்பத்தில் ஒரு கலர். முடிவில் ஒரு கலர். எனவே ஆரம்பத்தில் என்ன கலர் மற்றும் முடிவில் என்ன கலர் வேண்டும் என்பதை இங்கு செலக்ட் செய்யலாம்.

ஆரம்ப கலர் வலது பக்கத்தில் Dark ஆக தோன்றும். முடிவு கலர் இடது பக்கத்தில் Light ஆக மறையும்.






**4) Fountain Fill MidPoint:**

Mid Point என்றால் நடுவில் உள்ள Point என்பது தெரியும். ஒரு நிறம் எதுவரை Dark ஆக இருக்க வேண்டும் மற்றும் எதில் இருந்து Light ஆக மாற வேண்டும் என்பதை தீர்மானிக்க இது உதவுகிறது.

Slider

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

Property Barல் 50 என தோன்றும். அதாவது கட்டத்தில் உள்ள ஒரு அம்புகுறியில் நடுவில் உள்ள ஒரு சிறிய செவ்வகத்தை (Slider) குறிப்பிடுகிறது. இங்கு எண்ணிக்கையை கூட்டலாம்/குறைக்கலாம் அல்லது துடுப்பின் நடுவில் தோன்றும் Sliderஐ நகர்த்தலாம்.

Property Barல் முதலாவதாக உள்ள Fill Editஐ கிளிக் செய்தால் Fill Typeல் செலக்ட் செய்யப்பட்டுள்ள அயிட்டத்திற்கான Dialog Box தோன்றும்.

### 5) Fountain Fill Angle Pad and Edge Pad:




இதில் இரண்டுவிதமான மாற்றங்களை செய்யலாம்.

a) Angle Pad

b) Edge Pad

### a) Angle Pad:

இது மேல் பக்கமாக உள்ளது. இங்குள்ள எண்ணை கூட்டினால் துடுப்பு சாய்வாக மாறும். இதே செயலை துடுப்பின் மூலமாகவும் செய்யலாம். துடுப்பின் முனையில் உள்ள முக்கோணத்தை வேண்டிய திசையில் மவுசால் நகர்த்த வேண்டும்.



Angle Pad

### b) Edge Pad:

இது Property Barல் கீழ்பக்கமாக உள்ளது. துடுப்பின் அளவை குறைக்கலாம். இதே செயலை துடுப்பின் மீது மவுசை வைத்தும் செய்யலாம். இரண்டு Optionகளையும் தனித்தனியாகவோ அல்லது இரண்டையுமோ ஒரு படத்தில் பயன்படுத்தலாம்.



Edge Pad



Both

### 6) Fountain Step:

நிறத்தை Fill செய்யும்பொழுது Dark ஆக இருக்க வேண்டுமா என்பதை தீர்மானிக்க இது உதவுகிறது.

**குறிப்பு:** Fill Tool மூலம் நிறங்கள் Pattern, Texture, Postscrip ஆகியவைகளை பயன்படுத்த அவற்றிற்கான Dialog Boxஐ பயன்படுத்த வேண்டும். மேலும் தனித்தனியாக Toolகளை செலக்ட் செய்ய வேண்டும். ஆனால் இந்த Toolஐ பயன்படுத்தும்பொழுது Dialog Box தேவையில்லை.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## 7) Copy Fill Properties:



ஏற்கனவே ஒரு Objectல் விதவிதமாக நிறங்களை Fill செய்து இருப்போம். அதே டிசைனை வேறு ஒரு Objectல் கொண்டு வரவேண்டும். திரும்ப வேலை செய்வதற்கு பதிலாக Copy செய்து விடலாம். அதாவது ஒரு Objectல் உள்ள டிசைனை வேறு ஒரு Objectல் Copy செய்து விடலாம்.

முதலில் இரண்டு கட்டங்களை வரையவும். ஒரு கட்டத்தில் ஒரு டிசைனை பூர்த்தி செய்யவும்.

அடுத்து இந்த Interactive Fill Toolஐ கிளிக் செய்து Copy செய்யப்பட வேண்டிய கட்டத்தை செலக்ட் செய்யவும். இப்பொழுது கட்டத்தின் நான்கு புறமும் சிறிய கட்டம் தோன்றும்.

அடுத்து Property Barல் கடைசியாக உள்ள Copy Fill Property என்பதை கிளிக் செய்யவும்.

உடனே மவுஸ் பாயிண்டர் ஒரு Right Arrow போல பெரியதாக கருப்பு நிறத்தில் தோன்றும்.

இப்பொழுது எதை Copy செய்ய வேண்டுமோ அதன் மீது கிளிக் செய்யவும்.

அந்த டிசைன் புதிய கட்டத்தில் Copy ஆகி தோன்றும்.



Copy Fill Propertiesஐ செலக்ட் செய்து இதன் மீது Click செய்யவும். உடனே கீழே உள்ள கட்டம் முன்னதாக உள்ள கட்டம் போல மாறிவிடும்.






மேலே காலியாக உள்ள கட்டம் இவ்வாறு மாறி தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Interactive Mesh Fill Tool



Mesh என்றால் வலை. ஒரு Objectமீது குறுக்கும் நெடுக்குமாக வலை போன்று கோடுகள் தோன்றும். இதில் சிறி சிறு கட்டங்கள் நடு நடுவே புள்ளிகளுடன் தோன்றும்.

இந்த புள்ளிகளை Node என்பர். அந்த Node மீது மவுஸ் பாயிண்டரை வைத்து Drag செய்து Shapeஐ மாற்றி அமைக்கலாம். கட்டம் அல்லது வட்டம் வரையவும். அடுத்து இந்த Toolஐ கிளிக் செய்த உடன் கீழ்க்கண்டவாறு வலை போல தோன்றும். இந்த Toolஐ செலக்ட் செய்த உடன் மவுஜ் பாயிண்டர் உடன் ஒரு சிறு வலையும் தோன்றும்.

ஒரு நேரத்தில் ஒரு Objectல் தான் இந்த வலையை தோன்றச் செய்யலாம்.




Property Bar




### 1) Grid Size

கட்டங்களின் எண்ணிக்கையை கூட்ட / குறைக்க. அதாவது Row மற்றும் Columnஐ கூட்ட/குறைக்க.

### 2) Add Intersection:




புதியதாக ஒரு Column அல்லது ஒரு Rowஐ சேர்க்கலாம். இது எப்பொழுதும் Disable ஆக இருக்கும். எந்த இடத்தில் நாம் ஒரு Columnஐ சேர்க்க வேண்டுமோ, அந்த இடத்தில் கிளிக் செய்யவும். உடனே ஒரு புள்ளி தோன்றும். பிறகுதான் இந்த Tool Enable ஆகும். இதை கிளிக் செய்தால் புதிய ஒரு Coloumn தோன்றும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

### 3) Delete Nodes

Nodeகளை செலக்ட் செய்து கிளிக் செய்தால் Delete ஆகிவிடும். இதற்கு பதிலாக Del கீயையும் அழுத்தலாம்.



Step 1 Step 2

### 4) Convert Curve to Line

வளைவாக உள்ள கோட்டை நேராக மாற்றலாம். வளைவாக உள்ள கோட்டை செலக்ட் செய்து இந்த Optionஐ கிளிக் செய்தால் நேர் கோடாக மாறிவிடும்.



ஒரு கட்டத்ததை இவ்வாறு மாற்றலாம்

### 5) Convert Line to Curve

நேராக உள்ள கோட்டை வளைக்க உதவுகிறது. முதலில் வளைக்க வேண்டிய பகுதியை செலக்ட் செய்யவும். அடுத்து Property Barல் Convert to Line என்பது Enable ஆக இருக்கும். ஆனால் அதற்கு அடுத்து உள்ள இந்த Tool மட்டும் Disable ஆக இருக்கும். எனவே Convert to Line என்பதை கிளிக் செய்த உடன் இதற்கான Option, Enable ஆகி விடும். அதை கிளிக் செய்து கோட்டில் உள்ள Node மீது வைத்தால், மவுஸ் பாயிண்டர் உடன் ஒரு சிறு வளைவு தோன்றும். Drag செய்து வளைக்கலாம். இந்த Optionஐ செலக்ட் செய்யாமலும் வளைக்கலாம். வளைக்க வேண்டிய இடத்தில் மவுஸ் பாயிண்டரை வைத்து Drag செய்யவும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**6) Make Node a Cusp**



Symmetrical, Smooth, Cusp என மூன்று விதமான Nodeகள் உள்ளன என்பது நமக்கு தெறியும்.

தற்சமயம் பயன்பாட்டில் உள்ளது  Symmetrical Node ஆகவோ அல்லது Smooth Node ஆகவோ இருந்தால் அதை Cusp Node ஆக மாற்ற இந்த Option பயன்படுகிறது.

Cusp Nodல் இரண்டு Handleகளையும் தனித்தனியாக செயல்படுத்தலாம்.

**7) Make Node Smooth**



Symmetrical, Smooth, Cusp என மூன்று விதமான Nodeகள் உள்ளன என்பது நமக்கு தெறியும்.

தற்சமயம் பயன்பாட்டில் உள்ளது  Symmetrical Node ஆகவோ அல்லது Cusp Node ஆகவோ இருந்தால் அதை Smooth Node ஆக மாற்றி பயன்படுத் இந்த Option உதவுகிறது.

Smooth Nodல் இரண்டு Handleகளையும் தனித்தனியாக செயல்படுத்த முடியாது. இரண்டு  Handleகளும் ஒரே நேர் கோட்டில் தான் இருக்கும். ஆனால் இரண்டு Controller Lineகளின்  நீளங்கள் ஒரே அளவிலும் இருக்கலாம் அல்லது வெவ்வேறு அளவிலும்  இருக்கலாம்.

அதாவது ஒரு Controller Line நீளமாகவும் அடுத்த Controller Line  குட்டையாகவும் இருக்கலாம்.

**8) Make Node Symmetriacl:**



Symmetrical, Smooth, Cusp என மூன்று விதமான Nodeகள் உள்ளன என்பது நமக்கு தெறியும்.

தற்சமயம் பயன்பாட்டில் உள்ளது   Smooth Node ஆகவோ அல்லது Cusp Node ஆகவோ இருந்தால் அதை Symmetrical Node ஆக மாற்றி பயன்படுத் இந்த Option உதவுகிறது.

Symmetrical Nodல் இரண்டு Handleகளையும் தனித்தனியாக செயல்படுத்த முடியாது. இரண்டு  Handleகளும் ஒரே நேர் கோட்டில் தான் இருக்கும். மேலும் இரண்டு  Controller Lineகளின்  நீளங்கள் ஒரே அளவிதான் இருககும்.  வெவ்வேறு அளவுகயில் இருக்காது,  எனவே இரண்டு  Handleகளும் நடுவில் உள்ள Nodeல் இருந்து  சம தூரத்தில் இருக்கும்.

Smooth Nodeல் உள்ளது போல ஒரு Controller Line நீளமாகவும் அடுத்த Controller Line  குட்டையாகவும் இருக்காது.

**9) Copy Mesh Fill Properties From:**

ஒரு Objectல் உள்ளதை மற்றொரு Objectல் copy செய்ய இந்த பயன்படுகிறது.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Menu Bar

இது வரை Tool Boxல் உள்ள Toolகளைப் பற்றி பார்த்தோம்.

இனி Menu Barல் உள்ள மெனுக்களைப் பற்றி பார்ப்போம். இந்த Menu Barல் வரிசையாக மெனுக்கள் Title Barக்கு கீழே உள்ளது. இதில் ஒன்பது விதமான மெனுக்கள் உள்ளன. ஒவ்வொரு மெனுவின் கீழும் அனேக மெனுக்கள் உள்ளன.

ஒரு செயலை 4 விதமாக செய்யலாம்.

1) Tool Boxல் உள்ள Toolகள் மூலமாக.
2) Standard Tool Barல் உள்ள ஐகான்கள் மூலமாக.
3) Shortcut Key மூலமாக.
4) மெனு பாரில் உள்ள மெனுக்கள் மூலமாக.

இவற்றில் அநேக செயல்களைப் பற்றி நாம் ஏற்கனவே பார்த்து இருக்கிறோம்.

இப்பொழுது File மெனுவில் உள்ள மெனுக்களைப் பற்றி பார்ப்போம்.




Menu Bar

## File Menu

இதன் கீழ் உள்ள மெனுக்களில் முக்கியமான சிலவற்றைப்பற்றி பற்றி பார்ப்போம்.

### New Menu:

File → New

இது புதியதாக பைல்களை Open செய்ய உதவுகிறது. அதாவது ஒரு புதிய பைலை உருவாக்க உதவுகிறது.

### Close Menu:

File → Close

வேலை செய்து கொண்டு இருக்கும் பைலை மூடுவதற்கு பயன்படுகிறது.

**LAPTOP SERVICING**

DVDகள் இலவசம் தமிழ்

Laptopஐ பிரித்து தேவையான Toolகள் பற்றிய விவரங்கள், Hard Disk, RAM போன்றவற்றை எளிதாக வெளியே எடுத்து திரும்ப பொருத்தலாம். LCD Monitorஐ எளிதாக மாற்றலாம். மொத்தத்தில் தனித்தனியாக சுலபமாக பிரித்து திரும்ப பழையபடி Assemble செய்து விடலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Save Menu:**

File → Save

பைல்களை ஒரு பெயரில் Save செய்ய உதவுகிறது.
இந்த மெனுவை கிளிக் செய்தவுடன் கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




முதலில் பைலை Save செய்ய வேண்டிய Folderஐ செலக்ட் செய்யவும். அடுத்து பைலுக்கான பெயரை File Name என்ற இடத்தில் பூர்த்தி செய்து Save buttonஐ Click செய்யவும்.


**ஓர் அன்பான வேண்டுகோள்**

இந்த புத்தகம் படிப்பவர்களுக்கு புரியும்படியாகவும், படித்ததை செயல்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மிகவும் கடினமான உழைப்பினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே இதை படிப்பவர்கள் தயவுசெய்து **Xerox** எடுக்க அனுமதிக்க வேண்டாம் என உங்களை அன்புடன் வேண்டி கேட்டுக் கொள்கின்றேன்.

**இப்படிக்கு தங்கள் பேராதரவை என்றும் விரும்பும்**
**ஆசிரியர்**
***Semmangudi Gopalakrishnan. V** alias **GK***

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Open Menu:**

File → Open

ஏற்கனவே Save செய்து வைக்கப்பட்டுள்ள ஒரு பைலை Open செய்து மாற்றங்கள் செய்ய அல்லது பார்க்க உதவுகிறது.

இந்த மெனுவை கிளிக் செய்ததும் கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




முதலில் பைல் இருக்கும் Folderஐ Select செய்தால் அதற்கான விண்டோ தோன்றும்.

பிறகு open செய்ய வேண்டிய பைலை Select செய்து Open பட்டனை Click செய்தால் அந்த பைல் Open ஆகும்.

**DTP operator ஆகலாம்**

DTP operator வேலைக்கு மிக அதிக அளவில் தேவை உள்ளது. எனவே DTPக்கு தேவையான Photoshop, CorelDraw, Pagemaker ஆகியவற்றை மிகவும் சுலபமாக கற்று எளிதில் வேலை வாய்ப்பை பெறலாம், அல்லது DTP தொழிலை சுயமாக செய்யலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Print Preview Menu:

File → Print Previw

ஒரு கடிதத்தை அடித்த பிறகு அல்லது ஒரு Objectஐ வரைந்த பிறகு அதை Print செய்தால் பேப்பரில் எவ்வாறு தோன்றும் என்பதை காண்பிக்க இது உதவுகிறது.

இதை கிளிக் செய்தவுடன் கீழ்க்கண்ட விண்டோ (Dialog Box) தோன்றும்.

இந்த விண்டோவை Close செய்ய இங்கு Click செய்யவும்.




இங்கு பேப்பரில் Print செய்யப்பட்டால் எவ்வாறு தோன்றும் என்பதை காண்பிக்கிறது.

## Print Menu: (Ctrl + P)

File → Print

இந்த மெனு பக்கங்களை Print செய்ய உதவுகிறது.

இதை கிளிக் செய்தவுடன் ஒரு விண்டோ (பிரிண்டருக்கான Dialog Box) தோன்றும். அதில் தேவையான Optionகளை Select செய்து OKஐ Click செய்தவுடன் பேப்பரில் Print ஆகும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Export Menu Ctrl + E:**

File → Export

சாதாரணமாக Corel Drawவில் உருவாக்கப்படும் Fileகள் CDR என்ற Extention உடன் Save செய்யப்படும்.

அவ்வாறு Save செய்யப்பட்ட பைல்களை மற்ற Softwareகளில் Open செய்ய இயலாது. எனவே Corel Drawவில் தயாரிக்கப்பட்ட பைல்களை மற்ற Softwareகளில் பயன்படுத்த வேண்டுமாயின் JPG, BMP, GIF ஆகிய Extensionகளில் Save செய்யப்பட வேண்டும். இவைகளை JPG Format, BMP Format, GIF Format என்று கூறுவர்.

இதற்கு இந்த Export Menu பயன்படுகிறது.

ஒரு Corel Draw பைலை Export செய்ய இந்த மெனுவை கிளிக் செய்யவும். உடனே கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




இங்கு File Name என்ற இடத்தில் பைலுக்கு ஒரு பெயரை பூர்த்தி செய்யவேண்டும். எனவே இந்த இடத்தில் Sample என பூர்த்தி செய்யவும்.

அடுத்து Save as Type என்ற இடத்தில் JPG - JPEG Bitmaps என்பதை செலக்ட் செய்து Export என்பதை கிளிக் செய்யவும்.

உடனே அடுத்த பக்கத்தில் உள்ள விண்டோ (Dialog Box) தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




இங்கு OKஐ கிளிக் செய்யவும்.




இங்கு OKஐ கிளிக் செய்யவும்.

உடனே அந்த Corel Draw பைல் **Sample. JPEG** என்ற பெயரில் Save செய்யப்பட்டு விடும். இனி அந்த பைலை Photoshopலும் Open செய்யலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Import Menu: Ctrl + I**

File → Import

மற்ற Softwareகளில் தயாரிக்கப்பட்ட பைல்களை Corel Drawல் Open செய்து பயன்படுத்த இந்த மெனு உதவுகிறது.

JPG, BMP, TTF ஆகிய Formatகளில் உள்ள பைல்களைத்தான் Open செய்ய முடியும்.

இந்த Import மெனுவை கிளிக் செய்யவும். உடனே கீழ்க்கண்ட விண்டோ தோன்றும்.




இப்பொழுது நாம் Paintல் தயாரிக்கப்பட்ட ஒரு BMP பைலை Open செய்யப்போகிறோம். எனவே Files of type என்ற இடத்தில் BMP-Window Bitmap என்பதை செலக்ட் செய்யவும்.

இதனால் BMP பைல்களை மட்டும் காண்பிக்கும்.

அடுத்து File Name என்ற இடத்தில் தேவையான பைலை செலக்ட் செய்து Importஐ கிளிக் செய்யவும்.

இங்கு CIIT என்ற பைல் செலக்ட் செய்யப்பட்டுள்ளது.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

உடனே மவுஸ் பாயிண்டரின் அம்பு குறி மாறி திரையில் கீழ்க்கண்டவாறு தோன்றும்.




மவுஸ் பாயிண்டர் இவ்வாறு தோன்றும்.

மவுசை கிளிக் செய்யவும். பைலில் உள்ள தகவல் திரையில் தோன்றும். விருப்பப்படி நகர்த்தி பெரியதாகவும் மாற்றலாம்.




Open செய்யப்பட்ட BMP பைல்

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Edit Menu

இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன. அவற்றில் Copy Menu, Cut Menu, Paste Menu ஆகியவைகளை பற்றிப் பார்ப்போம்.

Cut & Paste மற்றும் Copy & Paste ஆகிய இரண்டும் அனைவருக்கும் தெரிந்ததே.

**Cut & Paste:** ஒரு இடத்தில் உள்ள தேவையான பகுதியை Cut செய்து வேறு ஒரு இடத்தில் Paste செய்தால், Cut செய்யப்பட்ட பகுதியில் இருக்காது.

**Copy & Paste:** மேலே கூறிய அதே செயல்தான். ஆனால் இங்கு Copy செய்த இடத்தில் அந்தப் பகுதி இருக்கும். அதாவது இரண்டு இடத்திலும் இருக்கும். Copy செய்த இடத்திலும் இருக்கும். Paste செய்யப்பட்ட இடத்திலும் இருக்கும். இந்த செயல்களை மெனுக்கள் மூலமாகவும் செய்யலாம். Shortcut கீகள் மூலமாகவும் செய்யலாம்.

முதலில் தேவையான பகுதியை Select செய்து கொள்ள வேண்டும். வசதிக்கு தகுந்தவாறு ஏதாவது ஒரு Selection Toolஐ பயன்படுத்தலாம்.

Selection செய்த பிறகு மெனு மூலமாக Copy அல்லது Cut செய்யலாம்.

**மெனு மூலம் செய்தல்:**

Edit → Copy அல்லது Edit → Cut

**Shortcut Key மூலம் செய்தல்:**

Ctrl + C - Copy செய்ய

Ctrl + X - Cut செய்ய

அடுத்து வேறு இடத்தில் Paste செய்ய வேண்டும். அடுத்த பைலை Open செய்யவும்.

**மெனு மூலம் Paste செய்ய:**

Edit → Paste

**Shortcut Key மூலம் Paste செய்ய:**

Ctrl + V

ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும். Copy செய்யலாம் அல்லது ஒரு உருவத்தை மட்டும் Copy செய்யலாம். ஒரு பக்கம் முழுவதையும் Copy செய்யலாம்.

Copy செய்வதற்கு முன்பாக Select செய்து கொள்ள வேண்டும். மேலும் Selection செய்ய அநேக Toolகள் உள்ளன. அவற்றில் பொருத்தமான Toolஐ பயன்படுத்த வேண்டும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Duplicate Menu: Ctrl + D

Edit → Duplicate

ஒரு Objectன் உருவத்தை வேறு ஒரு நகல் எடுக்க உதவுகிறது. இது Copy செய்வது போலவேதான்.

முதலில் Objectஐ செலக்ட் செய்யவும். அடுத்து இந்த Duplicate Menuஐ கிளிக் செய்யவும். உடனே கீழ்க்கண்டவாறு தோன்றும். அதாவது ஏற்கனவே உள்ள Objectன் மீதே சிறிது தள்ளி தோன்றும்.



Step 1



Step 2

அடுத்து புதியதாக உருவான Duplicate objectஐ Select செய்து Drag செய்யலாம்
Duplicat objectஐ Drag செய்து தேவையான இடத்தில் நகர்த்தி வைக்கலாம்.



Duplicate Object

Step 3

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Copy Properties From Menu :

Edit → Copy Properties From

ஒரு Objectல் சில மாற்றங்களை செய்து இருப்போம். உதாரணத்திற்கு நிறம், Outline நிறம் போன்றவற்றில் நமது விருப்பப்படி செய்து இருப்போம். அவ்வாறு உள்ள அனைத்தையும் வேறு ஒரு புதிய Objectல் Copy செய்து விடலாம்.

முதலில் ஒரு வட்டம் மற்றும் ஒரு கட்டம் வரையவும்.

வட்டத்தில் Outline மற்றும் உட்புறம் ஆகியவற்றிற்கு தனித்தனியாக நிறங்களை கொடுக்கவும்.



Step 1



Step 2

அடுத்து Copy செய்யப்பட வேண்டிய கட்டத்தை Select செய்யவும். அடுத்து Copy Properies From மெனுவை கிளிக் செய்யவும்.

உடனே கீழ்க்கண்ட விண்டோ(Dailog Box) தோன்றும்.




இங்கு உள்ள மூன்று Check Boxகளிலும் டிக் அடித்து OKஐ கிளிக் செய்யவும்.

உடனே மவுஸ் பாயிண்டர் Right Arrowவாக மாறிவிடும்.

அதை வட்டத்தின் மீது கிளிக் செய்யவும். உடனே அதற்குரிய Properties கட்டத்திலும் தோன்றும்.



Right Arrow போல உள்ள மவுஸ் பாயிண்டரை இந்த வட்டத்தில் கிளிக் செய்யவும்.



Final

வட்டத்தில் உள்ள Properties இந்த கட்டத்திலும் தோன்றுகிறது.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Insert Barcode Menu:**

Edit → Insert Barcode

சாதாரணமாக Super Market போன்ற கடைகளில் விறபனைக்காக உள்ள எல்லா பொருள்களிலும் அந்த பொருளின் விலை குறிப்பிடப்பட்டு இருக்கும். விலையின் மேல் ஒரு Bar Codeடையும் காணலாம். விலைகளுக்கு தகுந்தவாறு Barcode உருவாகும். இந்த Bar Codeன் மீது Scannerஐ காண்பித்து கம்ப்யூட்டரில் விலையை தோன்றச் செய்யலாம்.

இந்த Barcodeஐ தயாரிக்க இந்த மெனு உதவுகிறது.

இந்த Insert Barcode மெனுவை கிளிக் செய்யவும்.

உடனே கீழ்க்கண்ட விண்டோ(Dailog Box) தோன்றும்.




இங்கு Enter upto 30 Numeric digits, including-$:+: என்ற இடத்தில் விலையை பூர்த்தி செய்து Nextஐ கிளிக் செய்யவும்.

உடனே அடுத்த பக்கத்தில் உள்ள விண்டோ (Dailog Box) தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




இங்கு Nextஐ கிளிக் செய்யவும்.




இந்த விண்டோவில் Font Type, Font size, Alignment ஆகியவற்றில் மாற்றங்களை செய்யலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.




தேவையான மாற்றங்களை செய்த பிறகு இங்கு Finishஐ கிளிக் செய்யவும்.

உடனே Barcode கீழ்க்கண்டவாறு திரையில் தோன்றும்.

1500. 00

1500 ரூபாய்க்கான Bar Code

இனி இதை Stickerகளில் Print செய்து பொருள்கள் மீது ஒட்டிவிடலாம்

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Layout Menu

கோரல் டிராடிவில் உள்ள பக்கங்களை கையாள்வதற்கான மெனுக்கள் இதன் கீழ் உள்ளன.

## Insert Page... Menu:

புதிதாக பக்கங்களை சேர்க்க இது உதவுகிறது.

## Delete Page Menu:

தேவை இல்லாத பக்கங்களை Delete செய்ய இது உதவுகிறது.

## Rename Page:

சாதாரணமாக பக்கங்கள் Page1, Page 2 என தோன்றும். இவைகள் ஒவ்வொரு பக்கத்தின் அடி பாகத்தில் காணப்படும்.




ஒவ்வொரு பக்கத்திலும் தனித்தனியாக ஒரு Objectஐ வரைவோம். எந்தப் பக்கத்தில் என்ன படம் உள்ளது என்பதை சுலபமாக அறிய அந்தப் படத்தின் பெயரை அந்தப் பக்கத்திற்கு கொடுக்கலாம்.

ரோஜா உள்ள Page 4 பக்கத்தை Roja என மாற்றினால் கீழ்க்கண்டவாறு தோன்றும்.




Rename செய்வதற்கு முன்பு




Page 4ஐ Rename செய்த பிறகு

## Go to Page Menu:

Layout → Go to Page

ஒன்றுக்கு மேற்பட்ட பக்கங்கள் இருக்குமானால் உடனடியாக இருக்கும் பக்கத்தில் இருந்து வேறு ஒரு பக்கத்திற்கு செல்ல இந்த மெனு உதவுகிறது.

## Page Background Menu:

Layout → Page Background

ஒரு பக்கம் பூராவும் ஒரு Solid கலரையோ அல்லது ஒரு படத்தைப் போல Background தோற்றத்தையோ கொண்டு வரலாம்.

இதை கிளிக் செய்த உடன் ஒரு விண்டோ (Dialog Box) தோன்றும். அதில் தேவையான மாற்றங்களை செய்ய வேண்டும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Page Setup Menu:

Layout → Page Setup

Corel Drawல் தோன்றும் பக்கத்திற்கான மாற்றங்களை செய்ய இது உதவுகிறது. அதாவது கீழ்கண்டவைகளில் மாற்றங்கள் செய்யலாம்.

1) Normal paper அல்லது labels.
2) பேப்பரின் தோற்றம் Portrait, அல்லது Landscape.
3) Paper size Letter, A4, A3 etc.
4) பேப்பரின் நீளம், உயரம்(Length, Height)

இதை கிளிக் செய்தவுடன் கீழ்க்கண்ட விண்டோ (Dialog Box) தோன்றும்.




Page Setup Window

இந்த விண்டோவில் தேவையான மாற்றங்களை செய்ய வேண்டும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Arrange Menu

இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன. அவற்றில் முக்கியமாக தேவைப்படும் சில மெனுக்களைப் பற்றி பார்ப்போம்.

ஒரு பக்கத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட படங்கள் இருந்தால் அவற்றை கையாள இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன.

**Order Menu:** Arrange → Order

இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன.




**To Front Menu: (Shift + Page Up )**

Arrange → Order → To Front

இரண்டு படங்களில் பின்னால் இருப்பதை முன்னுக்கு கொண்டு வரலாம்.

**To Back: (Shift + Page Down)**

இரண்டு படங்களில் முன்னால் இருக்கும் படத்தை பின்னுக்கு தள்ளலாம்.

**Forward One: (Ctrl + Page Up )**

வரிசையாக உள்ள அநேக படங்களில் ஒரு படத்தை விருப்பமுள்ள ஒரு படத்திற்கு முன் கொண்டு வரலாம்.

**Back One: (Ctrl + Page Down )**

Arrange → Order → Back one

வரிசையாக உள்ள அநேக படங்களில் ஒரு படத்தை ஒரு படத்திற்கு பின் கொண்டு வரலாம்.

**Reverse Order Menu:**

Arrange → Order → Reverse Order

வரிசையாக அடுக்கப்பட்டு இருப்பதை தலைகீழாக மாற்றலாம். ஒன்றன் பின் ஒன்று. அதாவது 1 2 3 4 என இருப்பதை 4 3 2 1 என மாற்றி தோன்றச் செய்யலாம்.

**In Front of... Menu:**

Arrange → Order → In Front of...

ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக அநேக Objectகள் இருக்கும்பொழுது ஒரு குறிப்பிட்ட Objectஐ ஒரு குறிப்பிட்ட Objectற்கு முன்னால் கொண்டு வரலாம். அதாவது இருப்பிடத்தை மாற்றி முன்னுக்கு கொண்டு வரலாம்.

**Behind Menu:**

Arrange → Order → Behind

In Front of மெனுவிற்கு நேர் எதிர் மறை. ஒரு Objectஐ ஒரு குறிப்பிட்ட Objectற்கு பின்னால் கொண்டு செல்லலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Group Menu: ( Ctrl + G )**

Arrange → Group

Group செய்தல் என்றால் ஒன்றுக்கு மேற்பட்டு Objectகள் இருந்தால் அவற்றை ஒன்றாக சேர்த்தல். அதாவது ஒரே ஒரு Object பொல செய்யலாம்.

இதனால் அவற்றை நகர்த்தும் பொழுது ஒன்றுக்கொன்று விலகி நகராது. தேவையான Objectகளை செலக்ட் செய்து இதை கிளிக் செய்தால் ஒரு Group ஆக மாறிவிடும்.

இனி தனித்தனியாக Objectகளை நகர்த்த இயலாது. நகர்த்தினால் ஒன்றாக சேர்ந்து நகரும்.

**Ungroup All: ( Ctrl + U )**

Arrange → UnGroup

பல Objectகள் உள்ள Groupஐ கலைத்து தனித்தனியாக ஆக்கலாம். இதனால் ஒவ்வொரு Objectஐயும் தனித்தனியாக நகர்த்த முடியும். Group செய்யப்பட்ட Objectஐ செலக்ட் செய்யவும். இந்த Ungroup All என்பதை கிளிக் செய்தால் தனித்தனியாக மாறிவிடும்.

**Lock Object:**

Arrange → Lock Object

ஒரு Objectஐ நகர்த்த முடியாமலும் பெரியதாகவோ சிறியாகவோ மாற்ற முடியாமலும் செய்யலாம். இதை Lock செய்தல் என்பர். அவ்வாறு செய்ய Objectஐ செலக்ட் செய்து இந்த மெனுவை கிளிக் செய்யவும். இனி அந்த Objectஐ எதுவும் செய்ய இயலாது.

**Unlock Object Menu:**

Arrange → Unlock Object

Lockற்கு நேர் எதிர்மறை. Lock செய்ததை Cancel செய்ய இது உதவுகிறது.

Lock செய்யப்பட்ட Objectஐ செலக்ட் செய்து இதை கிளிக் செய்தால் உடனே Unlock ஆகிவிடும். இனி அந்த Objectஐ நகர்த்தலாம். அதன் Sizeஐ மாற்றலாம்.

**Shaping Menu:**

Arrange → Shaping

இது Arrange மெனுவின் கீழ் உள்ளது. இதன் கீழ் அநேக மெனுக்கள் உள்ளன.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Weld Menu:**

Arrange → Shaping → Weld

இரண்டு மூன்று Objectகளை உருவாக்கி அவைகளை ஒன்றோடு ஒன்றை இணைத்து ஒரு உருவத்தை உருவாக்குகிறோம்.

அவ்வாறு செய்யும் பொழுது ஆங்காங்கே குருக்கும் நெடுக்குமாக அனேக கோடுகள் தோன்றும்.

அவ்வாறு உள்ள குறுக்கு கோடுகளை அகற்றி ஒரே கோட்டில் வரைந்தது போன்று தோன்றச்செய்வதை Weld செய்தல் என்பர். அதாவது இணைக்கப்பட்ட பகுதி தெரியாது. இதை Weld செய்தல் என்பர்.

அனேக Objectகளை வரையவும்.

அடுத்து எல்லாவற்றையும் சேர்த்து செலக்ட் செய்யவும்.

பிறகு இந்த Weldஐ கிளிக் செய்தால் Weld செய்யப்பட்டு ஒன்றாக தோன்றும்.



இரண்டு Objectகள்

நான்கு Objectகள்



Weld செய்த பின்பு

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Trim Menu:

Arrange → Shaping → Trim

ஒரு Objectல் விரும்பிய Shapeல் (சதுரம், வட்டம், Polygon) ஒரு துளையை எளிதாக உருவாக்க இது உதவுகிறது.

முதலில் ஒரு கட்டடத்தை வரைந்து கலரை Fill செய்யவும்.

அடுத்து வரைந்த அந்த கட்டத்தை செலக்ட் செய்யவும்.





அடுத்து செவ்வக கட்டத்தில் துளைபோடுவதற்காக ஏதாவது ஒரு Toolஐ செலக்ட் செய்யவேண்டும். இங்கு Polygon வடிவில் ஒரு துளையை அந்த செவ்வக கட்டத்தில் உருவாக்கப் போகிறோம். எனவே அடுத்து Polygon Toolஐ செலக்ட் செய்து ஒரு எட்டு பக்க Polygonஐ அந்த செவ்வகத்தில் வரையவும்.

அடுத்தபடியாக Shaping Toolல் உள்ள Shaping என்பதை கிளிக் செய்யவும்.

Arrange → Shaping → Shaping

உடனே அருகில் உள்ள விண்டோ வலது புறத்தின் மேல்பாகத்தில் தோன்றும்.

இந்த விண்டோவில் Trim என்பதை செலக்ட் செய்யவும். பிறகு செவ்வக கட்டத்தை செலக்ட் செய்யவும்.




இப்பொழுதுதான் விண்டோவின் கீழ்ப்பாகத்தில் உள்ள Trim பட்டன் Enable ஆகும். அந்த Trimஐ கிளிக் செய்யவும்.

உடனே மவுஸ் பாயிண்டர் ஒரு கருப்பு, ஒரு வெள்ளை ஆகிய இரண்டு குட்டி கட்டங்களுடன் சேர்ந்து தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

இப்பொழுது மவுஸ் பாயிண்டரை செவ்வக கட்டத்தில் வைத்து கிளிக் செய்யவும். உடனே Polygon அளவிற்கு ஒரு துளை தோன்றும்.





Final

இப்பொழுது மவுஸ் பாயிண்டர் Polygon Shapeல் + குறியுடன் தோன்றும். இனி Drag செய்து தேவையான sizeற்கு மாற்றலாம்.



பெரியதாக மாற்றிய பிறகு



சிறியதாக மாற்றிய பிறகு

## அன்பான வேண்டுகோள்

எங்களது DVD, VCDக்கள் Copy Protect செய்யப்பட்டுள்ளன. எனவே அவைகளை Copy செய்ய இயலாது. Hard Diskலும் Copy செய்ய இயலாது. ஆகையால் Copy செய்ய முயற்சிக்க வேண்டாம் என பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

## Intersect Menu:

Arrange → Shaping → Intersect

ஒரு Objectல் இருந்து ஒரு குறிப்பிட்ட பகுதியை தேவையான வடிவில் Cut செய்து தனியாக வெளியே எடுத்து விடலாம். அவ்வாறு செய்ய இந்த மெனு உதவுகிறது.

முதலில் ஒரு செவ்வக கட்டத்தை வரைந்து அதில் ஒரு நிறத்தை Fill செய்யவும்.

அடுத்து எந்த Shapeல் வெட்டி எடுக்க வேண்டுமோ அதற்கான ஒரு Toolஐ செலக்ட் செய்யவும்.

இங்கு அந்த செவ்வக கட்டத்தில் இருந்து ஒரு எட்டு பக்க Polygon வடிவை வெட்டி எடுக்க போகிறோம். எனவே அடுத்து Polygon Toolஐ செலக்ட் செய்து ஒரு எட்டு பக்க Polygonஐ அந்த செவ்வகத்தில் வரையவும்.





அடுத்தபடியாக Shaping மெனுவில் உள்ள Shaping என்பதை கிளிக் செய்யவும்.

Arrange → Shaping → Shaping

உடனே அருகில் உள்ள விண்டோ வலது புறத்தின் மேல்பாகத்தில் தோன்றும்.

இந்த விண்டோவில் Intersect என்பதை செலக்ட் செய்யவும். பிறகு செவ்வக கட்டத்தில் உள்ள Polygonஐ செலக்ட் செய்யவும்.






Polygonஐ செலக்ட் செய்யவும்.

இப்பொழுதுதான் விண்டோவின் கீழ்ப்பாகத்தில் உள்ள Intersect With பட்டன் Enable ஆகும். அந்த Intersect Withஐ கிளிக் செய்யவும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

உடனே Polygonஐ சுற்றி இருந்த Selection புள்ளிகள் மறைந்து மவுஸ் பாயிண்டர் ஒரு கருப்பு, ஒரு வெள்ளை ஆகிய இரண்டு குட்டி கட்டங்களுடன் சேர்ந்து தோன்றும்.



இப்பொழுது மவுஸ் பாயிண்டரை செவ்வக கட்டத்தில் வைத்து கிளிக் செய்யவும்.
உடனே செவ்வக கட்டம் மறைந்து Polygon அளவிற்கு உள்ள உருவம் மட்டும் தோன்றும்.



இப்பொழுது மவுஸ் பாயிண்டர் Polygon Shapeல் + குறியுடன் தோன்றும்.
இனி Drag செய்து தேவையான sizeற்கு மாற்றலாம்.



Drag செய்து சிறியதாக மாற்றிய பிறகு

Drag செய்து பெரியதாக மாற்றிய பிறகு

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

# Text Menu

இதன் கீழ் அனேக மெனுக்கள் உள்ளன. அவற்றில் முக்கியமாக தேவைப்படும் சில மெனுக்களைப் பற்றி பார்ப்போம்.

## Fit Text to Path Menu:

Text → Fit Text to Path

தலைப்புகளை வளைவாகவோ அல்லது விரும்புகின்ற வடிவத்திலோ தோன்றச் செய்யலாம்.

முதலில் தேவையான தலைப்பபை அடிக்கவும்.

அடுத்து ஒரு வட்டத்தை வரையவும்.

அடுத்து எழுத்துக்களை செலக்ட் செய்யவும்.




அடுத்து Textல் உள்ள Fit Text to Path என்பதை கிளிக் செய்யவும்.

உடனே மவுஸ் Right Arrow பொல மாறிவிடும்.

வட்டத்தின் மீது கிளிக் செய்யவும். உடனே எழுத்துக்கள் வட்டத்தின் மீது வளைவாக உட்காரும்.







அடுத்து வட்டத்தை Delete செய்யவும். இவ்வாறு தேவையான வடிவங்களில் தலைப்புகளை தோன்றச் செய்யலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

கீழ்கண்டவாறும் தேவையான வடிவங்களில் தலைப்புகளை தோன்றச் செய்யலாம்.










Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

**Straighten Text Menu:**

Text → Straighten Text

வளைவாக உள்ள தலைப்புகளை நேராக தோன்றச் செய்ய இது உதவுகிறது.

Pick Toolஆல் முதலில் எழுத்துக்களை செலக்ட் செய்யவும்.

அடுத்து Text மெனுவின் கீழ் உள்ள Straight Text என்பதை கிளிக் செய்யவும்.

உடனே வளைவாக உள்ள தலைப்பு நேராக மாறிவிடும்.




வளைவான தலைப்பு

Step 1




Step 2




Step 3




Step 4 & Final

நேராக மாற்றிய பின்பு

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

இதுவரை எழுத்துக்களை வளைப்பது பற்றி பார்த்தோம். வளைக்கப்பட்ட எழுத்துக்களை வட்டத்தின் மேல் பகுதியில் தோன்றுமாறு செய்தோம்.

அடுத்து வட்டத்தின் கீழ் பகுதியில் ஒரு வரியில் உள்ள எழுத்துக்களை வளைவாக தோன்ற செய்து பார்ப்போம்.

ஏற்கனவே செய்தது போல முதலில் தேவையான எழுத்துக்களை ஒரு வரியில் அடிக்கவும். அடுத்து ஒரு வட்டத்தை வரையவும்.




அடுத்து அடித்த எழுத்துக்களை Pick Toolலால் Select செய்து Fit Text to Path மெனுவை Click செய்யவும்.

Text → Fit Text To Path

உடனே கீழ்கண்டவாறு வட்டத்தின் மேல் பாகத்தில் கோட்டின் மீது எழுத்துக்கள் தோன்றும்.




Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

அடுத்து Porperty Barல் உள்ள Text Placementல் எழுத்துக்கள் கோட்டிற்க்கு கீழே உள்ள மூன்றாவது Optionஐ Click செய்யவும்.






உடனே எழுத்துக்கள் வட்டத்தில் மேல் பக்கத்தில் இருந்து வட்டத்தின் கீழ்பகுதிக்கு சென்றுவிடும். மேலும் எழுத்துக்கள் தலைகீழாக இருப்பதால் படிக்க இயலாது.

அடுத்து Property Barல் கடைசியாக உள்ள Place On Other Side என்ற ஐக்கானை Click செய்யவும்.





உடனே எழுத்துக்கள் வட்டத்தில் கோட்டிற்கு மேல்பகுதியில் படிக்கக்கூடிய வகையில் நேராக அருகில் உள்ளவாறு தோன்றும்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

திரும்பவும் Property Barல் உள்ள Text Placementல் இரண்டாவது Optionஐ Click செய்தால் அருகில் உள்ளவாறு பக்கவாட்டில் தோன்றும்.





அடுத்து Property Barல் கடைசியாக உள்ள Place On Other Side என்ற ஐக்கானை Click செய்யவும்.







உடனே எழுத்துக்கள் வட்டத்தில் கோட்டிற்கு வெளிப்பகுதியில் படிக்கக்கூடிய வகையில் நேராக தோன்றும்.

திரும்பவும் Property Barல் உள்ள Text Placementல் உள்ள நான்காவது Optionஐ Click செய்தால் அருகில் உள்ளவாறு பக்கவாட்டில் எதிர் பக்கம் கோட்டிற்கு வெளிப்பகுதியில் தோன்றும்.







Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

அடுத்து Property Barல் கடைசியாக உள்ள Place On Other Side என்ற ஐக்கானை Click செய்யவும்.




உடனே எழுத்துக்கள் வட்டத்தில் கோட்டிற்கு உட்பகுதியில் தோன்றும்.



கடைசியாக வட்டத்தை Delete செய்யவும். கீழ்கண்டவாறு வளைவாக எழுத்துக்கள் மட்டும் தோன்றும்.




**குறிப்பு:** வளைவான எழுத்துக்களின் முன்பக்கம் ஒரு சிவப்பு நிற புள்ளி தோன்றும். அந்த புள்ளியின் மீது மவுஸ் பாயிண்டர் வைத்து Drag செய்தால் வட்டத்தை சுற்றி எழுத்துகள் நகரும் விரும்பும் இடத்தில் எழுத்துக்களை வட்டத்தில் வைக்கலாம்.




ஒரு DVDல் மேல்பக்கமும் கீழ்பக்கமும் இவ்வாறு எழுத்துக்களை வளைவாக தோன்றுமாறு செய்யலாம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

அடுத்து ஒரு வட்டத்திற்குள் எழுத்துக்களை எவ்வாறு அடிப்பது என்பதை பார்ப்போம்.

முதலில் ஒரு வட்டம் வரையவும்.
அடுத்து Text Toolஐ Click செய்து
வட்டத்திலுள்ள கோட்டின் மீது
வைக்கவும்.




அவ்வாறு கோட்டின் மீது
வைக்கும்பொழுது அருகில்
உள்ளவாறு தோன்றும்.
அவ்வாறு தோன்றும் பொழுது
Click செய்யவும்.



உடனே Cursor தோன்றும்
மேலும் வட்டத்ததை சுற்றி
புள்ளிகள் தோன்றும்.
இனி தேவையான
செய்திகளை அடிக்கலாம்.







முதலில் வரைந்த வட்டம் Delete
செய்யப்பட்ட பிறகு தோற்றம்

சுற்றி உள்ள புள்ளிகள் வேண்டாம் என
கருதினால் வட்டத்ததை Pick Toolலால் Click
செய்யவும்.
அடுத்து வட்டத்தின் நடுவில் Right Click
செய்யவும். உடனே தோன்றும் POP UP
விண்டோவில் Convert to Curvesஐ Click
செய்யவும் அல்லது Ctrl+Q ஐ அழுத்தவும்..
உடனே கோடுகள் மறைந்து விடும்.




உட்புறம் இருந்த புள்ளி வட்டம் மட்டும்
Delete செய்யப்பட்ட பிறகு தோற்றம்

முதலில் வரைந்த வட்டம் வேண்டாம் என
கருதினால் மவுஸ் பாயிண்டரின் முனையை
பொருமையாக வட்டத்திற்கான கோட்டின் மீது
வைத்து Click செய்தால் வட்டம் மட்டும் Select
ஆகும். பிறகு Delஐ அழுத்தினால் வட்டம்
மறைந்துவிடும்.




இரண்டு வட்டமும் Delete
செய்யப்பட்ட பிறகு தோற்றம்

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

வட்டமான அல்லது வளைவான கோடடின் மீது எழுத்துக்களை சுலபமாக அடிக்கலாம்.

முதலில் ஒரு வட்டம் வரையவும்.
அல்லது வளைவான ஒரு கோட்டை வரையவும்.
அடுத்து Text Toolஐ Click செய்து வட்டத்திலுள்ள கோட்டின் மீது வைக்கவும்.




அவ்வாறு கோட்டின் மீது வைக்கும்பொழுது அருகில் உள்ளவாறு தோன்றும்.
அவ்வாறு தோன்றும் பொழுது Click செய்யவும்.




உடனே Cursor தோன்றும்.
இனி தேவையான செய்திகளை அடிக்கலாம். அடிக்கப்படும் எழுத்துக்கள் கோட்டின் மீது தோன்றும்.

இதே செயல் முறை வளைவு கோடுகளுக்கும் பொருந்தும்.




Pick Toolலால் Select செய்தால் முதல் எழுத்திற்கு முன்பாக ஒரு சிவப்பு புள்ளி தோன்றும். அதை Drag செய்து எழுத்துக்களை கோட்டின் மீது நகர்த்தலாம்.




GK
GK
GK

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

நாம் எழுத்துக்களை அடிக்க Text Toolஐ Select செய்து Drag செய்கிறோம். உடனே புள்ளிகளுடன் ஒரு கட்டம் தோன்றும். அந்த கட்டத்திற்குள் எழுத்துக்களை அடிக்கிறோம். எழுத்துக்களை அடித்து முடித்த பிறகும் அந்த கடடம் இருக்கும். அந்த கட்டம் வேண்டாம் என்றால் அகற்றிவிடலாம்.






சுற்றி உள்ள புள்ளிகள் வேண்டாம் என கருதினால் கட்டத்ததை Pick Toolலால் Click செய்யவும்.

அடுத்து கட்டத்தின் நடுவில் Right Click செய்யவும். உடனே தோன்றும் POP UP விண்டோவில் Convert to Curvesஐ Click செய்யவும் அல்லது Ctrl+Q ஐ அழுத்தவும். உடனே சுற்றி உள்ள புள்ளிகள் மறைந்து விடும்.







சுற்றி உள்ள புள்ளிகள் அகற்றப்பட்ட பிறகு தோற்றம்.

Copyright **GOPALAKRISHNAN. V** alias **GK** #45/AP969, 70th Street, 11th Sector, K.K.Nagar, Chennai-600 078.

செம்மங்குடி கோபாலகிருஷ்ணனின்

# Learn In a Week ஒரே வாரத்தில் கற்கலாம்

உங்களை உங்களது வீட்டில் இருந்தபடியே கண்டிப்பாக ஒரு தேர்ச்சி பெற்ற Computer Engineer ஆக எங்களது புத்தகங்கள்+DVD மூலம் மாற்ற முடியும்

ஓய்வு பெற்றவர்கள், இல்லத்தரசிகள் அனைவரும் மிகவும் சுலபமாக கற்கலாம். வயது வரம்பு, கல்வி தகுதிகள் தேவையே இல்லை. ஆங்கிலத்தில் அதிக தேர்ச்சி இல்லையே என கருதவே வேண்டாம். ஆர்வமும் தன்னம்பிக்கையும் மட்டுமே போதுமானது. குடும்பத்திலுள்ள அனைவருமே கற்கலாம்.

அனைத்து விதமான கம்ப்யூட்டர்களையும் அஸம்பிள் செய்யலாம், சர்வீஸ் செய்யலாம். Laptopஐயும் சுலபமாக பிரித்து திரும்ப அஸம்பிள் செய்யலாம், சர்வீஸ் செய்யலாம்

வங்கிகள், அலுவலகங்கள், Browsing Center ஆகியவற்றில் உள்ளது போல அனேக கம்ப்யூட்டர்களை இணைத்து ஒரு LAN நெட்ஒர்க்கை மிகவும் சுலபமாக அமைக்கலாம்.

DTP operator வேலைக்கு மிக அதிக அளவில் தேவை உள்ளது. எனவே DTPக்கு தேவையான Photoshop, CorelDraw, Pagemaker ஆகியவற்றை மிகவும் சுலபமாக கற்று எளிதில் வேலை வாய்ப்பை பெறலாம், அல்லது DTP தொழிலை சுயமாக செய்யலாம்.

Computer இல்லாத அலுவலகங்களே இல்லை. எனவே ஒரு அலுவலகத்தில் Computerல் செய்ய வேண்டிய வேலைகளை Office Automation புத்தகத்தின் மூலம் சுலபமாக கற்று அலுவலகத்தில் பயம் இல்லாமல் வேலைகளை செய்யலாம்.

Professional Camera, Handycamகளில் எடுக்கப்பட்ட Videoக்களை Edit செய்து திருமண நிகழ்ச்சிகளின் வீடியோக்களை போலவே சுலபமாக தயாரிக்கலாம். சுயமாக Video, Photo தொழில் துவங்கி நல்ல வருவாய் ஈட்டலாம்

**எங்களிடம் கிடைக்கும் புத்தகங்கள்:**

★**Computer Hardware -** 3 Volumeகள்

1) **Volume - 1**
2) **Volume - 2**
3) **Volume - 3**

★**Networking - LAN -** 2 Volumeகள்

1) **Volume - 1**
2) **Volume - 2**

★**Computer Basics**

★**Office Automation**

★**Laptop Servicing**

★**Video Editing**

★**Page Maker**

★**Photoshop**

★**CorelDraw**

★**Export Business**

இது வரை கம்ப்யூட்டரை தொடாதவர்கள் இனி கம்ப்யூட்டரில் சுலபமாக வேலை செய்யலாம்.

ஏற்றுமதி வியாபாரத்தை வெற்றிகரமாக செய்து குபேரனாக ஆகலாம்

இது கதையேஅல்ல நிஜமோ நிஜம்

**Free 3 DVDs with each Book**

**CIIT Infotech** என்ற பெயருக்கு DD அல்லது MO அனுப்பவும். VPP கிடையாது.

**CIIT Infotech**, No. 45, 2nd Floor, 70th Street, 11th Sector, K.K. Nagar, Chennai - 600 078, Tamil Nadu, India. Cell: 9444451485, 9840170413

www.ciitinfotech.com **E-Mail:** vgk_gk@yahoo.co.in